KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

9-MAR 1932

Vol 5] 1932 ஷ பிப்ரவரி மீ 18உ [No. 7

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 121
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா—சுயம்வர காண்டம் 124
3. குன்றுடையானும் மக்களும்
W.V. கோவிந்தசாமி ராஜு BA.,LT. 127
4. பெண்பாலார்—(ஷாபன்ஹூர் கட்டுரை மொழிபெயர்ப்பு) - K. இராஜகோபாலன் 129
5. தினகர வெண்பா
S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 131
6. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 2. களம் 1.)
ஷேக்ஸ்பியர் நாடகம் 132
7. அப்பர் (64 கலை—தர்க்கம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 135
8. கம்பராமாயணம் (சரபங்கர் பிறப்பு நீங்கு படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 136
9. வர்த்தமானம். 139

கலாநிலயம்

நெஞ்சத்து நல்லன் யான் 3.

செயலளவில் ஒருகருமம் நற்செய்கைபோல் தோன்றுமேனும், அத்தோற்றத்தினோடுநிற்காமல், உள்ளூற ஆழ்ந்து அதன் உண்மைத்தன்மை எத்தகையதென்பதை நடுநிலை வழுவாமற் சோதிக்கப் புகுங்கால், அதனைச் செய்தவன் மனத்தின்கண் எத்தகைய எண்ணம் எழுகின்றதென்பதை ஆதாரமாய்க்கொண்டு ஆராயவேண்டுமென்னும் அடையாளத்தை விளக்க முயன்ற நாம், "ஒருவனுக்கு ஒருஉதவிசெய்ததன்பின் தன்னெஞ்சத்து நல்லன் யான் என்னும் நினைவு எழுமாயின், கருணையால் இயங்கியது அவன் மனம் என்று கொள்வோம்........... இது செய்தேன், ஆதலின் நெஞ்சத்து நல்லன் யான்' என்று உடன்பாட்டுவகையில் தோன்றும் நினைவையே நாமிங்குக் கருணைக்கு அடையாளமாகக் காட்டுகின்றோம்........" என்று இயம்பிய வாசகம், பெருமையின் பெருமை என்னுந் தலைப்புடைய பண்டைத் தலையங்கமொன்றில் "ஒரு தொழிலின் அல்லது ஒரு நிலையின் பெருமை எத்துணை உயர்ந்ததேனும், தன்னையே அறியாமல் அத்தொழிலைப் புரிபவரும் அந்நிலையில் நிற்பவரும் எய்திய பெருமையின் உயர்வினைத் தம் தொழிலையும் நிலையையுந் தெரிந்து விவகரிப்பவர் எட்டமாட்டார்" என்று வந்துள வாக்கியத்துடன் முரண்படவில்லையோ என ஐயுற்று வினவிய நம் நண்பருக்கு எமது நன்றி உரியதாகின்றது. இவ்வாறு இவர் வினவியிலராயின், இத்தகைய ஐயத்திற்குஇடமுளதென் றெண்ணாமையால் உரையாது விட்டிருந்த சில விடயங்களை விளக்கிக் காட்டச் சமயம் வாய்த்திராதன்றோ! எனினும், இவ்விரண்டிலும் முரண் யாதுமில்லை என்பதை நமது நண்பர் தாமே தெளிந்துகொண்டபின்னரும், எம்மைச் சோதிக்கவே இதுவினவினாரோ, என்றோர் சந்தேகமும் தோன்றுகின்றது. ஏனெனில், 'பெருமையின் பெருமை' என்ற அத் தலையங்கத்தின் குறிக்கோளிற்கும், 'நெஞ்சத்து நல்லன் யான்' என்னுமித் தலையங்கத்தின் குறிக்கோளிற்கும் உள்ளவொருவேற்றுமையை அவரே பெரும்பாலும் உணர்ந்திருக்கின்றாரென்பது அவரது சொற்களிலிருந்தே தெரியவரும். இந்தத் தலையங்கத்தால்—"ஒருவன் செய் கருமம் எதுவாயினும், செய்தவன் உள்ளத்தில் 'நல்லன் நான்' என்ற எண்ணத்தை அதுதான் கிளரிவைக்குமாயின், அக்கருமம் நற்கருமம் என்பதும், அவன் மனமும், அருளும் அன்பும்பெருமையும் உடையது என்பதும் கைவரப் பெறுகின்றது"— என்றும்; முன்னைய தலையங்கத்தால்—"நல்லது செய்கின்றேன் என்று ஞாபகத்துடன் செய்யும் கருமமும் அவ்வெண்ணம் நிலைக்கும் மனமும் பெருமையின் இலக்கணத்தின்பாற் பட்டது அன்று! எனக் காட்டப் பெற்றுளது" என்றும்; அவர் பிரித்துக் கூறும் வாக்கியங்களில், முன் செய்தவன் என்று இறந்தகாலத்திலும் பின், 'செய்கின்றேன்', 'செய்யும்' என நிகழ்கால எதிர்காலங்களிலும்வினைச்சொற்கள் பயிலப்பெற்றிருப்பதே, நம்முடைய நண்பர், அறிந்தோ அறியாமலோ, இவ்விரண்டிற்குமுள்ள வேற்றுமையை உட்கொண்டிருக்கின்றாரென்பது புலப்படுகின்றது.

ஆம், அதுவே வேற்றுமை. முன்னைய தலையங்கத்தில் மனதற்ற பரிசுத்தநிலையின் பெருமையைக் கூறினோம்; இந்தத் தலையங்கத்தில் செய்கையின் தூய்மையைக் காட்டுகின்றோம். "யான், பக்தி கருணை கற்பு

முதலியவைகளை உடைத்தாயிருப்பதால், இது இது செய்கின்றேன், அல்லது செய்தல்வேண்டும்'' என்ற எண்ணத்தைப் பின்பற்றி ஒருகருமத்தினை யியற்றப் புகுவதைக்காட்டிலும்,ஒருவகை எண்ணமும் இல்லாமலே, பக்தியும் ஈகையும் கற்பும் நிகழ்வது நனிமிகச் சிறந்தது, என்பதுதான் ''பெருமையின் பெருமை' என்னுங் கட்டுரையின் கருத்து—ஆயினும் ஒன்று நாம் இங்கு உரைத்தல்வேண்டும். 'நல்லன் யான்' என்ற எண்ணத்துடன் செய்கின்றசெய்கையை எமது நண்பர் கூறுகின்றபடி நாம் 'இழிக்கவும்' இல்லை. அங்கு,

''அறத்தினல் வரும் இன்பத்திற்கு அவாவி அதனைக் கடைப்பிடிப்பாரில் வேறொரு சாராரும் உளர். இம்மை மறுமைகளில் இவையிவை எனக் குறிக்கப்படும் இன்பங்களை எண்ணுமல், இதனுல் தனக்கு வரும் பயனையுந் தூக்காமல், பயனெதுவாயினும் அறங்களைப் புரிவதே தம் கடமை என்னுந் துணிவினல் ஆற்றுபவர் அவர். ஆற்றியாற்றிவருங்கால், அலாநெறிப் படுவதற் கஞ்சியும் அறத்தா றொழுகுதற்கே அவாவியும் கடவுளைப் பரவுங்கால் பூரித்தும் திகழ்கின்ற தம் இயற்கையைத் தாமே தேர்ந்துணர்ந்தவராகி, ''நெஞ்சத்து நல்லன் யாம்'' என்ற நினைவில் நிலைத்தவராகின்றனர். இந்நன்னிலை வாய்க்கப்பெறுவது அரிதினும் அரிது என்பதற்கு ஐயமில்லையெனினும், அதனிலும், உயர்ந்தோர் வேறுளர்..................நாலடிச் செய்யுளொன்றால் நயக்கப்படும் 'நெஞ்சத்து நல்லன் யாம்'என்னும்நினைவு மன்னியவந் நன்னிலை நனிமிகச் சீரிது. இதனுல் எய்திய வோர் அசைவிலா அமைதியும், மாருத இன்பமும் உடையாரிற் பெரியார் இல்லையென்று இவ்வுலகின்கண் எண்ணுதல் இயற்கையே; அது பிழையுமன்று. ஆயினும், இன்னவர்களையும் ஓரளவு விஞ்சுதற்கியலுமெனத் துணிகின்றோம். விஞ்சுதற்கு இயலுமோ என்பதொன்றே இங்கு ஆராயப்பெறுகின்றதாதலின், அவ்வாறு விஞ்சினவர் இவ் வையகத்தில் 'உளர் இலர்' என்னுமொரு உறுதிச்சொல் ஈண்டு இன்றியமையாததன்று. ஆசைபற்றி, விஞ்ச இயலும் என அறையலுற்றோமே யன்றி வேறன்று''

என்று வரைந்துள விடங்களில், எண்ணித் துணிந்த கருமங்களுக்குரிய பெருமை எள்ளளவும் குறைக்கப் பெற்றதில்லைஎன்பது வெளிப்படை. எனினும்,இதனை நம் நண்பருக்கு நினைவூட்டற்கு இடையே எடுத்துக் காட்டினேமேயன்றி, முரணுடையதென்று அவர் கொண்ட ஐயத்தைத் தெளிவிப்பதற்கு இது இன்றியமையாததன்றென்பதை அறிவோம்.

இன்னணம், ''நெஞ்சத்து நல்லன்யான்'' என்றஎண்ணத்தை ஆதாரமாகவைத்து அவ் வெண்ணம் காரணமாகப்புரிகின்ற காரியங்களின் தன்மையே, 'பெருமையின் பெருமை' என்னுந்தலையங்கங்களில்ஆராயப்பெற்றிருக்கின்றதென்பதை முதலில் மயக்கற உணர்ந்து மறவாமல் காக்கவேண்டியது மிகவும்அவசியம். அங்கு, இந்தஎண்ணம் காரணம், அதனுல் நிகழலாகின்ற பக்தி ஈகை பொறை முதலியன காரியம். அங்கு யாம் சொல்லதெல்லாம், இந்தக் காரியம் அந்தக் காரணத்தால் நிகழ்வதைக்காட்டிலும், அந்த எண்ணமுந்தூண்டாமல் நிகழ்வதே நனிமிகச் சிறப்புடைத்து,என்பதல்லால் வேறன்று. கண்ணப்பனுக்கும் பக்தியிருந்தது, பட்டினத்தடிகளுக்கும் பக்தியி[illegible]து. எனினும், அ[illegible] வேடன்,''பக்திபுடையவ[illegible]தலின் காளத்தியப்[illegible] பனைக் கும்பிடுகிறேன்'' [illegible]று காரணமறிந்து காரியம் செய்திலன்; பட்டினத்தடிகள்தான் தன்காரியத்தின் காரணமாகிய ஓர் எண்ணத்தை உடையவராயிருப்பது அறிந்தாராதலின், தான் ஆளாவது எங்ஙனமென்று ஏங்கினர். ஆதலின் கருமத்தின் பெருமையை அதன் காரணத்தைக்கொண்டு அங்குச் சோதித்தோம். காரியம் எதுவாயினும் அதன் பெருமையுஞ் சிறுமையும் அதற்கு நோக்கமாயிருந்தவோர் காரணத்தைப் பொருந்தியே மதிக்கப்படும் என்பது வெளிப்படை. ஈகையையே எடுத்துக் கொள்வோம். ஒருவனுக்கு ஒன்று கொடுக்குங்கால், பின்னொருநாள் அவனுல் தனக்குப் பயன் ஏதேனும் விளையலாம் என்று எதிர்நோக்குமெனின், கொடையென்னும் அக்காரியமும், அதற்குக் காரணமாயிருந்த நோக்கத்தின் இழிவினல் இழிந்ததாகின்றது. இதுவன்றி இட்டு இசைபட வாழவேண்டும் என்னும் நோக்கமே காரணமாயின் அவ்வீகை என்னும் கருமத்தின் தன்மை உயர்வடைகின்றது. அதுவுமன்றி, ஈத்துவக்கும் இன்பத்திற் கவாவியது காரணமாயின், ஈகையின் தன்மை இன்னும் உயர்வடைகின்றது. அதுவுமின்றி ஈவதே கடன் என்ற கொள்கையின் காரணத்தால் நிகழ்ந்த கொடை முன்னினும் ஒரு பங்கு உயர்கின்றது. அக் கடமை என்ற கருத்துத்தானு மில்லாமல், கரவென்பதொன் றுண்டு என்றுகூடத் தெரியாமல், ஈதல் என்னும் இயற்கையே காரணமாய்ப் புரியப்பெறும் கொடையோ, எல்லாவற்றிலும் சிறந்தது. மேல்மேல் நவில்கின்ற இம்முறையில் இதனினும் சிறந்தது இருப்பினும் இருக்கலாம்; அது புத்தியின் கூர்மையைப் பொருந்தியதொன்று; இம்முடிவு விபரீதமென்று வியத்தற் குரியதுமன்று.

ஏனெனில், சற்று ஆழ்ந்து யோசித்துப்பார்க்குங்கால்,இயற்கையாய் நிகழ்வதன்றிக் கருத்துடன்தொடர்ந்து நடைபெறுகின்ற வாய்மை பொறை ஈகை முதலிய அறங்கள் ஒருவகையில் நாடகத்திறத்தை யன்றோ நினைப்பூட்டுகின்றது! நாடகமேடையில் நடிக்கின்ற அரிச்சந்திர வேடத்தான் ஒருவன், தான் அங்கு வாய்மைவழி விலகாது நிற்றல்வேண்டும் என்பதை உணர்ந்து அதற்கிணங்க ஒழுகுகின்றான். விசுவாமித்திர வேடத்தவன்வந்து அவன்சிரத்தினில் உதைக்கும்போது, சினமொன்றுங்கொள்ளாமல் பெருமையின் படிவமாய், உதைத்த கால்களை வருடி ''நொந்ததோ பாதம் நொந்ததோ, என் மகுடம் தைத்துப் பாதம் நொந்ததோ'' எனப் பணிவுடன் வினவவேண்டியதும் அவன் கடன். வேடத்திற்கேற்ற நடிப்புநிலை இது என்பதை மறந்து, அவனை பொறை வாய்மை முதலிய குணங்களால் உயர்ந்தவன் என்று கருதலாமா?தான் வாய்மையுடையவனுய் இருக்கவேண்டும், பொறையுடையவனுய் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தையே அச்சமயம் அம்மேடையின்மீது நடத்திவைக்கின்றான். நாடகமேடையைவிட்டு இப்பொழுது, வெளியுலகத்தில் ஒழுகுகின்றவர்களை இதே எண்ணத்தைக் கொண்டு சோதிப்போம். 'பொறுத்தவர் பூமியாள்வார்' அல்லது, ''இன்ன செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்,'' அல்லது, ''ஒரு கன்னத்திலடித்தவனுக்கு மறு கன்னத்தையுங் காட்டவேண்டும்' எனப் பெரியோர் கற்பித்திருக்கின்றன ராதலின் அதன்படிதான் இப்பொழுது நடப்பதே முறை, என்ற எண்[illegible]த்துடன், பிறர்செய் தீமையைத் தாங்குமொருவன் [illegible]மைக்கும், நாடகசாலை வேடதாரிக்கும், மன நிலை[illegible] பொறுத்தவரையில் என்ன வேற்றுமை யிருக்கின்றது? அவனும் இவனே போல், இன்ன சந்தர்ப்பத்தில் இன்ன செய்யவேண்டும் என்று தெரிந்து அவ்வறிவு காரணமாய் ஒரு காரியத்தைச் செய்கின்றான். எனின், அரிச்சந்திரன் நான், ஆதலினல் இவ்வாறு நடிக்கவேண்டும் என்று அரங்கில் செய்யும் ஒரு கருமத்திற்கும், நல்லன் யான் ஆதலின் யான் இவ்வாறு நடக்கவேண்டும், என்று வெளியுலகில் செய்யும் ஒரு கருமத்திற்கும் அந்தத்தில் பேதம் பெரிதில்லை. ஆகலின் நெஞ்சத்து நல்லன் நான், என்ற எண்ணம் இழிந்ததன்றேனும் அவ்வெண்ணம் காரணமாகச் செய்கின்ற நற்கருமங்களோ கபடநாடகங்களே என்னும்படி இயங்குகின்றன. இந்தக் கொடுமையை நினைத்து இரங்கியவர் பட்டினத்தடிகளன்றி, ஆழ்ந்தசிந்தனையும் ஆராய்ச்சி நுட்பமும் வாய்ந்த பெரியோர் பலர் உளர்.

சுருங்கச் சொல்லின்—ஒருவன் தன்னுடைய நற்குணங்களை நினைத்து அந் நினைவு காரணமாக விளைகின்ற நற்காரியங்களின் உண்மைத்தன்மையை உட்கொள்ள முயன்றது, 'பெருமையின் பெருமை' என்னுமம் முன்னைய கட்டுரை. காரியம் ஒன்றேயாயினும், அது இந் நினைவைக் காரணமாய்க் கொண்டிருத்தலைக் காட்டிலும் எவ்வித நினைவுமற்ற இயற்கையையே காரணமாய்க் கொண்டிருக்குமாயின் அக்காரியம் பின்னுமொருபடி பெருமையும் சிறப்பு முடையதாகின்றது என்பது அக்கட்டுரையின் முடிவு. அங்கு, நெஞ்சத்து நல்லன் யான் என்னும் நினைவு, காரணம்—அதனுல் நிகழ்கின்ற நற்கருமம், காரியம். அக்காரியத்தின் பெருமையை, காரணவேற்றுமைக்குத் தக்கபடி மேன்மேல் அளந்து காட்டினேம்.

இனி, 'நெஞ்சத்து நல்லன் யான்' என்ற தலைப்புடைய இக்கட்டுரைக்கு வருவோம். இது, ஈகை முதலிய கருமங்கள் நிகழ்ந்தபோது அவைதாம் நற்கருமங்களையாக நிகழ்ந்தனவோ அல்லவோஎன்பதைச் சோதித்திப்பார்க்கும் வகையொன்று நாடுகின்றது. முன்னையது, ஒரு கருமத்தின் நன்மையைப்பற்றி ஐயுறவெய்த வில்லை; ஐயமற நின்ற அக்கருமத்தின் பெருமையை மட்டுமே அளந்தது. பின்னைய இக்கட்டுரை, ஒரு கருமத்தின் நன்மையின் உண்மையையே சோதிக்கப் புகுகின்றது. ''ஒருவனுக் கொன்று ஈந்தாயெனின், அல்லது உனக்கிழைத்த ஒரு குற்றத்தைப் பொறுத்தாயெனின், அப்பொழுது ஈகை பொறை என்னும் பெயர்களிற்குரிய தொழில்கள் தோன்றுகின்றனவேனும், பல்வேறு நிலைகளில் நன்கொடையும் உண்மைப் பொறையும் ஆகாமலே அவை போகலாம். இலஞ்சமாகக் கொடுக்கும்போதும், கையாலாகாமற் பொறுக்கும்போதும், கொடையுமில்லை பொறையுமில்லை என்பது அவரவர் மனத்திற்கே ஐயமின்றித்தெரிந்து நிற்கும். மற்று, தன்னையே திருப்பித்திருப்பிச் சோதித்துப் பார்த்துக்கொள்ளப் பயின்றிராத மனங்களோ, சில அரிய நிலைகளில் கொடையல்லாத தொன்றைக் கொடைபோலும் பொறையல்லாத தொன்றைப் பொறைபோலும், இப்படியே மற்றவைகளிலும், மயங்கக்கூடும். இவ்வண்ணம் போலிகளைப் பொருளென்று பற்றுகின்ற மயக்கத்தினின்று தீர்வதற்கு உபாயம் யிதுவென்று உரைப்பது இக்கட்டுரையின் கருத்து. இக்கருத்தைத் தெளிவிக்க முயல்கின்ற ஆராய்ச்சியில், செய்யப்பட்ட கருமத்தை, முன்போல் காரியமாகக் கொள்ளாமல், அது எதற்குக் காரணமாகின்றது என்பதைச் சோதிக்கச் சொல்கின்றோம். அந்தச் சோதனைக்கு ஆதாரமாகும்பொருட்டு இக்காரியத்தை மீண்டுமோர் காரணமாய்வைத்து அக்காரணத்தால் எக்காரியம் நிகழ்கின்றதென்று பார்த்தல் வேண்டும். காரணகாரியத் தொடர்பில், காரணம் முந்தியது, காரியம் பிந்தியது. கொடை முதலிய காரியங்களுக்குக் காரணங்கள் முன்னுரைத்தபடி பற்பலவாகலாம். அவைகளில் 'நெஞ்சத்து நல்லன் யான்' என்ற நினைவும், அல்லது, இயல்வது கரவா இயற்கையேயும் காரணமாயின், புரிந்த கொடை உண்மையிற் கொடையே என்பதை மனத்துட்கொண்டு, இவ்விரண்டு காரணங்களின் வேற்றுமைக்கிணங்க அவ்வுண்மைக் கொடை முறையே ஒன்றிற்கொன்று பெருமையால் மிகுகின்றது என்று முன்னைய கட்டுரையில் விளக்கிய நாம் இதனில், புரியப்பெற்ற கொடைமுதலிய கருமங்கள் இன்னதற்குக் காரணமாயின், அவைகளை உண்மை என்றும், இல்லையேல் போலியென்றும் கொள்க என்றுகூறுகின்றோம். ஒரு காரியத்தைச் செய்தபின், ''இது செய்தேன், ஆதலால் நெஞ்சத்து நல்லன் யான்'' என்ற நினைவு பிறக்குமாயின், அந்தத் தொழில் உண்மையாய கொடை முதலியவைகளின் இலக்கணத்திற்குரியதாகின்றதென்பது இக்கட்டுரையின்செய்தி. இங்கு, கொடைமுதலியவைகள் காரணமாய் மாறி அதனுல் பிறக்கின்ற நினைவைக் காரியமாக்குகின்றது. இந் நினைவு பலதிறப்பட்டதாக இருக்கலாம். அவைகளில், ''நெஞ்சத்து நல்லன் யான்'' என்ற நினைவாகிய காரியம் பிறப்பதற்குக் காரணமாகியகொடை உண்மைக்கொடை எனக்கொள்க என்று செப்புகின்றோம். உண்மைக்கொடையின் இலக்கணம் இது; உண்மைக்கொடையின் பெருமையின் அளவு அது. கொடையைக் காரணமாகவைத்து அதன்இலக்கணத்தை இங்குக் காட்டினேம்; மற்று, அக்கொடையைக் காரியமாகவைத்து அதன்பெருமையை முன்னர்க்காட்டினேம். இதனுல் இவ்விருவேறு கட்டுரைகளிலுள்ள வேற்றுமையும், அவ் வேற்றுமைகளுக் கிடையேயுள்ள ஒற்றுமையும் புலப்படும். எனவே, 'நெஞ்சத்து நல்லன்யான்' என்றநிலையை ஓரிடத்தில் இழித்தும் மற்றோரிடத்தில் புகழ்ந்தும் முரண்படப் பேசினேம்என்றுஎமது நண்பர் எய்திய ஐயத்திற்கு ஆதாரமில்லை எனத் தெளிவாரென நம்புகின்றோம்.

இதன்மேல், எமது நண்பர் மேற்கோளாக எடுத்துக் காட்டுகின்ற ஸ்ரீமான் சேஷாசல ஐயரவர்களது வாக்கியங்களை ஆராயவேண்டிய அவசியமில்லை. அவருடைய கொள்கைகளின் பொறுப்பு எம்முடையதன்று என்னும் எளியவோர் தந்திரத்தாலும் யாம் ஒளிந்து கொள்ளவேண்டா. அங்கு அவர், கைகேசியின் இயற்கைநிலையையும் கோசலையின் அறிவுநிலையையும்பற்றிப் பிரித்துப் பேசுகின்றாரேனும், அந்நிலையளவில், நால்வர்க்கும் வேற்றுமை உற்றிலாக் கைகேசி, அவ்வேற்றமையை மாற்றிய கோசலையினும் பெருமையாற் சிறந்தவளே என்பதை மறுத்திருப்பதாகத் தெரியவில்லை-இருவரும் அந்நிலையில் ஒருதாத்தவரே என்றமட்டிலேனும் அவரே ஒவ்வுகின்றார். அதன்பின், இந்நிலைகளுக்குரிய திண்மையையுந் தளர்வையும் வேறுபடுத்திக் காட்டுகின்ற அவருடைய உரைகளுக்கும், செய்கின்ற கருமங்களின் உண்மையையும் பெருமையையும் காட்டுகின்ற எம்முடைய உரைகளுக்கும் எவ்வித இயைபும் இன்மையால், ஒன்றினை ஒன்று மறுக்கின்றதெனக் கருத இடமில்லை.

2895

தமிழ்ப் பாடம் 7.

நள வெண்பா—சுயம்வர காண்டம்

[111-வது பக்கத் தொடர்ச்சி]

16. அஞ்சன் மடவனமே யுன்ற னணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகா ணென்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன்.

பதப்பிரிவு:—அஞ்சல் மட அனமே, உன்தன் அணி நடையும் வஞ்சி அனையார் மணி நடையும் விஞ்சியது காண பிடித்ததுகாண் என்றான், களி வண்டு மாண பிடித்த தார் மன்.

அன்வயம்:—களிவண்டு மாணப்பிடித்த தார் மன், "மட அனமே அஞ்சல், உன்தன் அணி நடையும் வஞ்சிஅனையார் மணிநடையும் விஞ்சியது காணப் பிடித்ததுகாண்" என்றான்.

கருத்து:—இள அன்னமே, நீ பயப்படாதே, உனது நடையோ அல்லது இம்மாதர்களின் நடையோ அழகிற் சிறந்ததென்று பார்க்கவே பிடித்தேன்" என்று நளன் அன்னத்திற்குக் கூறினான்.

பதவுரை.

களி - (கள்ளுண்டு) களித்த
வண்டு - வண்டுகள்
மாண - அழகாக
பிடித்த - தங்கியிருக்கின்ற
தார் - மாலை (அணிந்த)
மன் - மன்னன் (நளன்),
மட - இளமைபொருந்திய
அனமே - அன்னமே,
அஞ்சல் - பயப்படாதே.
உன்தன் - உன்னுடைய
அணி - அழகிய
நடையும் - நடையையும்
வஞ்சி அனையார் - கொடிபோன்ற இம்மாதரது
மணி - அழகிய
நடையும் - நடையையும்
விஞ்சியது - எது அழகில் உயர்ந்தது என்று
காண - (நான் சீர்தூக்கி) பார்க்க
பிடித்தது காண் - உன்னைப்பிடித்தேன் பார்.
(வேறு உனக்கு ஒருதீங்கு செய்வதற்கன்று)
என்றான் - என்று கூறினான்.

விரிவுரை:—கொல்வானோ இவன் நம்மை என்று பயந்திருந்த அன்னத்திற்குத் தேறுதலாகவும், பிடித்துத் தந்த மாதர்களுக்கு உபசாரமாகவும் ஒருங்கே நளன் உரைத்த இவ்வார்த்தைகளின் நயம் பாராட்டத் தக்கது. மாதர்களுடைய கண்களுக்குக் கயல்மீனும், முகத்திற்குச் சந்திரனும், சாயலுக்கு மயிலும், உவமையாவதுபோல் நடையினழகிற்கு அன்னம் உவமை.

---

17. செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனியன்னம்—வெய்ய
அடுமாற்ற மில்லா வரசன்சொற் கேட்டுத்
தடுமாற்றந் தீர்ந்ததே தான்.

பொழிப்புரை:—சிவந்த தாமரையில் வசிக்கின்ற இலக்ஷ்மிக்குச் சமானமான அந்தப் பெண் பிடித்த ஒப்பற்ற அன்னம், கொடிய கொலையைக் குறிக்காத அரசனது சொற்களைக்கேட்டுக் கலக்கம்தீர்ந்தது. [செய்ய - சிவந்த. தையல் - பெண். அடு - கொல்கின்ற மாற்றம் - வார்த்தை.]

இது சுலபமான செய்யுள். இதற்கு நீங்களாகவே, வினைவிடை விளக்கம் எழுதிப் பார்த்துக்கொள்க.

---

18. திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே [யுன்றன்
இசைமுகந்த தோளுக் கிசைவாள்—வசையில்
தமயந்தி யென்றோதுந் தையலாண் மென்றோள்
அமையந்தி யென்றோ ரணங்கு.

பதப்பிரிவு:—திசை முகந்த வெண் கவிகை தேர் வேந்தே உன்தன் இசை முகந்ததோளுக்கு இசைவாள் வசை இல் தமயந்தி என்று ஓதும் தையலாள் மெல் தோள் அமை அந்தி என்ற ஓர் அணங்கு.

கருத்து:—'வேந்தே, குற்றமற்றவளும் அழகு மிகுந்தவளும் ஆகிய தமயந்தியே உனக்கு ஏற்ற நாயகியாவாள்' என்று அன்னம் நளனைப்பார்த்துச் சொல்லியது.

பதவுரை.

திசை - எல்லாத் திக்குக்களையும்
முகந்த - தன்னுள் அடக்கிய
வெண் - வெண்மையான
கவிகை - குடையினது நிழலில் செல்கின்ற
தேர் - இரதத்தையுடைய
வேந்தே - அரசனே,
உன்தன் - உன்னுடைய
இசை - கீர்த்தி
முகந்த - பெற்ற
தோளுக்கு - தோள்களுக்கு
இசைவாள் - நாயகியாய்ப் பொருந்தக் கூடியவள் [யாரெனில்
வசை - குற்றம்
இல் - இல்லாத
தமயந்தி - தமயந்தி
என்று - என்று
ஓதும் - சொல்லப்படுகின்ற
தையலாள் - பெண் (அவள் எப்படிப்பட்டவ [ளென்றால்)
மெல் - மெல்லிய
தோள் - தோள்கள்
அமை - மூங்கிலைப்போல்
அந்தி - அழகுடையவள்
என்ற - என்று சொல்லப்படுகின்ற
ஓர் - ஒரு
அணங்கு - தெய்வக்கன்னியைப் போன்றவள்.

விளக்கம்:—(இச்செய்யுள் முற்றிலும் அன்னத்தினுடைய வார்த்தை. நளனுக்குச் சொல்லியது) நளனை அன்னம் என்னவென்று அழைத்தது? வேந்தே - அரசனே. எதை உடைய வேந்தே? தேர்வேந்தே - இரதத்தை உடைய அரசனே. அந்தத் தேரிற்குமேல் என்ன இருக்கின்றது? கவிகை-குடை. எந்த நிறக் கவிகை? வெண்கவிகை - வெள்ளைக்குடை. அந்தக் கவிகை எப்படிப்பட்டது? முகந்த-மொண்டுகொண்ட

அதாவது தன்னுள் அடக்கிய கவிகை. எதைமுகந்த வெண்கவிகை? திசைமுகந்த வெண்கவிகை-பத்துத் திக்குக்களையும் தன்னுள்ளே அடக்கிய வெண்குடை. உலகெலாம் அடக்கிய குடைநிழலில் செல்கின்ற இரதங்களை யுடையவனே, என்று அன்னம் நளனை அழைத்து என்ன சொல்லியது? இசைவாள்-பொருந்துபவள் (ஒருத்தியிருக்கின்றாள் என்று சொல்லியது) எதற்கு இசைவாள்? தோளுக்கு இசைவாள். யாருடைய தோளுக்கு? உன்தன்-உன்னுடைய. உன்னுடைய எத்தகைய தோள்களுக்கு இசைவாள். முகந்த-கொண்ட. எது கொண்ட? இசை முகந்த-கீர்த்திகொண்ட. அவள் யார்? தையலாள்-ஒருபெண். எப்படிப்பட்ட தையலாள்? ஓதும் தையலாள்-சொல்லப்படுகின்ற பெண். என்ன என்று ஓதும் தையலாள்? தமயந்தி என்று ஓதும் தையலாள்-தமயந்தி என்று சொல்லப்படுகின்ற பெண். தமயந்தி எப்படிப்பட்டவள்? இல் தமயந்தி-இல்லாத தமயந்தி. என்ன இல்லாத தமயந்தி? வசைஇல் தமயந்தி? ஒருவித குற்றமும் இல்லாத தமயந்தி. அவள் யார் போன்றவள்? ஓர் அணங்கு - ஒரு தெய்வகன்னிகையைப் போன்றவள். அவளை என்னவென்று சொல்லுவார்கள்? அந்தி என்று ஓர் அணங்கு - அழகுடையவள் (அந்தம் அழகு, அதை உடையவள் அந்தி. பொன் உடையவளைப் பொன்னி, என்பது போல்) என்று சொல்லப்படுகின்ற ஒரு தெய்வகன்னிகைக்கு நிகரானவள். எதைப்போன்ற அந்தி? அமை அந்தி - மூங்கிலைப் போன்ற அழகுடையவள். எது மூங்கிலைப்போன்றது? தோள்- (அவளுடைய) தோள்கள். தோள்கள் எப்படிப் பட்டவை? மென் தோள்-மிருதுவானவை.

விரிவுரை:—உயிருக்கு உயிர் மாறாக அளிப்பது போல், அன்னம் தன்னைக் கொல்வதில்லை என்றுரைத்த நளனுக்குத் தானும் அவனுக்கு உயிர் அனையவளாவதற்கிருக்கும் பெண்ணொருத்தியின் செய்தியைச் சொல்லத் தலைப்படுகின்றது. அரசனுக்குரிய பல சின்னங்களில் வெண்குடை அவனது அருளுக்கு அடையாளம். தன்னைக் கொல்வதில்லை என்ற அவனது அருளைநினைத்த அன்னம் குடையைக் கூறியது.

---

19. அன்ன மொழிந்த மொழிபுகா முன்புக்குக்
கன்னி மனக்கோயில் கைக்கொள்ளச்—
சொன்னமயி
லார்மடந்தை யென்றா னநங்கன் சிலைவளைப்பப்
பார்மடந்தை கோமான் பதைத்து.

பதப்பிரிவு:-அன்னம் மொழிந்த மொழி புகாமுன் புக்கு கன்னி மனம் கோயில் கை கொள்ள சொன்ன மயில் ஆர் மடந்தை என்றான் அநங்கன் சிலை வளைப்ப பார் மடந்தை கோமான் பதைத்து.

அன்வயம்:—அன்னம் மொழிந்தமொழி புகாமுன், கன்னிபுக்கு (அவனது) மனக்கோயில் கைக்கொள்ள, அநங்கன் சிலைவளைப்பப் பார்மடந்தை கோமான், பதைத்துச் 'சொன்னமயில் ஆர்மடந்தை' என்றான்.

கருத்து:—அன்னம் சொன்ன சொற்களை முற்றிலும் கேட்பதற்கு முன்னேயே, தமயந்தியினது உருவமும் நினைவும் நளனது மனத்தில் குடிகொள்ளவே அவன் காதலுற்றுப் பதைத்து, 'நீ சொன்ன[illegible] மயில்போன்ற பெண் யாருடைய மகள்? [illegible]' என்றான்.

பதவுரை.

அன்னம் - அந்த அன்னமானது
மொழிந்த - சொன்ன
மொழி - வார்த்தைகள்
புகாமுன் - (இவன் செவிவழியே) புகுவதற்கு [முன்னால்,
கன்னி - தயமந்தியானவள்
புக்கு - புகுந்து
மனம் - (நளனது) மனமாகிய
கோயில் - கோயிலை
கைக்கொள்ள - தன்வசமாக்கிக்கொண்டதால்,
அநங்கன் - மன்மதன்
சிலை - தனது வில்லை
வளைப்ப - வளைக்கவே,
பார் - பூமியாகிய
மடந்தை - தேவியின்
கோமான் - நாயகனாகிய நளன்
பதைத்து - பதைத்து,
சொன்ன - (நீ) சொன்ன
மயில் - பெண்ணானவள்
ஆர் - யாரது
மடந்தை - மகள்
என்றான் - என்று கேட்டான்.

கன்னி கோயிலைக் கைக்கொண்டதால் அநங்கன் சிலை வளைக்கவே கோமான் பதைத்து, 'மயில் யார் மடந்தை' என்றான்: எனத் தொடரும்.

விரிவுரை:—முற்றிலும் குற்றமில்லாத தன்மை மானுடவகுப்பைச் சேர்ந்த எவருக்கும், மற்று இம் மண்ணுலகிலிருக்கின்ற எதற்கும் உரியதன்று. எவ்வளவு சிறந்தகுணங்களை உடையவரிடத்திலும் சிறிது தோஷம் இருந்தே தீரும். எத்தனை கெட்டவர்களிடத்திலும் எள்ளளவேனும் குணம்இல்லாமற் போகாது. ஆதலால் முற்றிலும் குணமுடையதென்றும் குற்றந் தவிரக் குணமே இல்லாததென்றும் சொல்லத் தகுந்தது இவ்வுலகின்கண் இல்லவே இல்லை. எனவே, எந்த விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் அதனிடத்திலுள்ள குணங்களையும் குற்றங்களையும் நிறுத்துப் பார்த்துக் குணபாகம் அதிகமாயிருந்தால் நல்லதென்றும், குற்றபாகம் அதிகமாக இருந்தால் கெட்டதென்றும் மதிப்பதுதான் இந்தக் கீழுலகத்திற்கு ஏற்ற முறை. ஆகையாற்றான்,

"குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்."

என்று திருவள்ளுவர், நம்மை ஆராய்ந்து தெளிந்து கொள்ளச் சொல்கின்றார். எனின், எவ்வளவு சிறந்தவர்க்கும் மனிதராயின் எள்ளளவேனும் குற்றம் இருக்கும். இது மானிடர்க்குரிய விதி. இந்த விதியளவாகிய வசையும் இல்லை என்று ஒருவரைப் புகழ்ந்தால் அவர் தெய்வத்தன்மை யுடையவராகின்றார். கம்பரும் இராமபிரானை ஒரிடத்தில் 'வசையில் ஐயன்' (குற்றமில்லாதவன்) என்றழைத்து அவனது தெய்வத்தன்மையை விளக்கிவைக்கின்றார். இல்லையெனில் இராமனது அலகிலா நற்குணங்களைக் கூறாது அவன் குற்றமில்லாதவன் என்று சொல்வது ஒரு பெருமையாகுமோ! முன்செய்யுளில் 'வசையில் தமயந்தி' என்றதிலும் இதே கருத்துத்தான் அமைந்திருக்கின்றது. [illegible]ருக்கும் இயற்கையாய் இருக்கக் கூடிய [illegible]யும் இல்லாத தமயந்தி, என்ற

[illegible]

படியினால் அவள் மானுட மகளல்லள், தெய்வகன்னிகையே என்று நினைக்கவேண்டும். ஆகையாற்றான், அன்னம் அவளைப் பின்னும் அப்பாசுரத்தில் 'அணங்கு' என்று அழைக்கின்றது. அணங்கு என்பதற்குத் தெய்வப்பெண் என்றொரு அர்த்தம் இருக்கிறது.

வசையில் தமயந்தியென்பதாலும் அணங்கு என்பதாலும் தெய்வப்பெண்ணொன்று முன்பாசுரத்தில் புகழ்ந்ததற்கு ஏற்ப அவள் குடிபுகுந்த நளனது மனமாகிய இடத்தை இந்தச் செய்யுளில் கவி, கோயில் என்று கூறினர். இத்தனைகாலம் கோயில் இல்லாதிருந்த தெய்வம் இன்றைக்கு ஓர் கோயில் தனக்கெனத் தேடிக் குடிப்புகுந்துகொண்டதாம். 'கன்னி' மனக்கோயில் கைக்கொள்ள, என்ற தொடரில், கோயிலாகிய மனம், நளனுடைய மனம், அதைக் கைக்கொண்டது கன்னியாகிய தமயந்தி. ஆகையால், 'கன்னியாகிய தமயந்தி, நளனுடைய மனமாகிய கோயிலைத் தன்வச மாக்கிக்கொள்ள' என்பதே அதன் பொருள். அன்னம் சொன்ன வார்த்தைகளைக்கேட்ட மாத்திரத்திலேயே நளனது மனதில் தமயந்தியினது நினைவு நிறைந்துவிட்டது, என்பது அதன் கருத்து. அதாவது, நளனுக்குத் தமயந்தியின்பால் காதல் பிறந்தது. ஒருவரை ஒருவர் காண்பதால் காதல்பிறப்பது இயற்கை. இங்கு நளனுக்குக் கேள்வியாலேயே தமயந்தியின்பால் காதல் உண்டாகின்றது. சும்மா இருக்கின்றவரையில் தானும் சும்மா இருக்கின்ற மன்மதன், காதல் ஒருவர் மனதில் பிறந்தது என்று அறிந்தவுடன் வில்லும் கையுமாய் வந்துசேருவான். காமன் என்றபேர் இவனுக்கு இருந்தாலும் மன்மதன் முதல்முதல் ஒருவருக்குச் காதல் பிறக்கும்படி இப்பொழுது செய்கிறதில்லை. ஒருதரந்தான் அவன் தன் இயற்கைக்கு மாறாகத் தேவர்களது வேண்டுகோளுக்கு இணங்கித் தவநிலையிலிருந்த சிவபிரானிடத்தில் இந்தக் காரியம் செய்தான். அதற்கு ஏற்ற தண்டனையும் அவனுக்குக் கிடைத்தது. அவன் அநங்கன் (அங்கம் இல்லாதவன்) ஆனபிறகு காதல் தானாக உதித்த மனத்தை யுடையவர்களிடமே சென்று, பிறந்த காதலை வளர்த்துவைத்துக் காதலர்கள் விரைவிற் சேருமாறு தூண்டுவதே தன் கருமமாக இந் நாட்களில் விவகரித்துவருவதாகக் கவிகள் பாராட்டுகின்றனர். கன்னி, மனக்கோயில் கைக்கொள்ள, என்றதிலுள்ள 'கொள்ள', என்பது காரணப்பொருளில் வந்த ஓர் வினையெச்சம். (வினையெச்சத்தின் இலக்கணத்தை முன் கூறியுள்ளேன். அதை மீண்டு மோர்முறை எடுத்துப் படிப்பீர்களாயின் நலம்). கைக்கொண்டதால், அநங்கன் சிலை வளைத்தான், அதாவது, நளனுக்குத் தமயந்தியின் நினைவு உண்டான காரணத்தால் மன்மதனும் தன் வேலையைச்செய்யத் தொடங்கினான். 'கொள்ள' என்னும் வினையெச்சம், 'வளைப்ப, என்னும் இன்னொரு வினையெச்சத்தைக் கொண்டு முடிகின்றது. இனி 'வளைப்ப' என்பதும் காரணப்பொருளில் வந்த வினையெச்சமே. அதுவும் 'பதைத்து' என்ற மற்றொரு வினையெச்சத்தைக் கொண்டு முடிகின்றது. பதைத்து' என்பது பதைக்கின்ற செய்கையையும் இறந்தகாலத்தையும் காட்டுவதொழிய அதற்கு வேறுபொருள் இல்லை. ஏனென்றால் வர, போக, செய்ய, அழ, அடிக்க என்பனபோல் அ என்னும் சப்தத்தில் முடிகிற வினையெச்சங்களுக்குமாத்திரமே, காரணம், காரியம், அல்லது உடனிகழ்ச்சிப் பொருள்கள் உண்டு என்று கூறியிருக்கின்றேன். பதைத்து என்பது அந்த மாதிரி முடிகின்ற வினையெச்சம் அல்லாததால் இதற்குப் பொருள் மாறுதல் இல்லை. பதைத்து, என்னும் வினைஎச்சம் 'என்றான்' எனும் வினைமுற்றைக்கொண்டு முடியும். கொள்ள—வளைப்ப—பதைத்து—என்றான். கன்னி கைக்கொண்டபடியினால் அநங்கன் சிலையை வளைக்க, அதனால் கோமான் பதைத்துக் கேட்டான். அநங்கன் சிலை வளைப்பதாவது, பிறந்த காதலை மன்மதன் மேன்மேலும் தூண்டத் தலைப்படுவது.

தன் காதலுக்குப் பாத்திரமாய அவளை அன்னமோ, வசையில்லாதவள் என்றும் அணங்கு என்றும் கூறியது. இது மேம்படப் புகழ்ந்தவோர் புகழ்ச்சியோ, அல்லது மெய்யாகவே அவளொரு தெய்வமோ, தெய்வமாயின் அவளை எய்துதற்கு இயலாதே, எனினும் தன் தோளிற்கு இசைவாள் என்றும் சொல்லியதே, என்று இன்னபல எண்ணி எண்ணி உற்ற ஐயம் தீர வேண்டிச் 'சொன்னமயில் ஆர் மடந்தை' என ஆர்வத்தோடு கேட்டனன்.

குறிப்பு:—பதத்திற்கு இயற்கையாய் இருக்கின்ற பொருள் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மாறி அது வேறு ஒரு பொருளைக் குறிக்குமானால் அது ஆகுபெயர், என்று முன் சொல்லியிருக்கின்றேன். மாது, காரிகை, இவை 'அழகு' என்னும் அர்த்தம் உடையனவாய், அந்த அழகாகிய குணத்தையுடைய பெண்களைக்குறிக்கும்போது அவை குணஆகுபெயர் ஆகின்றன. தையல் என்றாலும் அழகு என்று அர்த்தம். அதுவும் குணவாகு பெயராய் மாதர் என்னும் பொருளில் இதற்குமுன் 16-வது, 17-வது, செய்யுட்களில் வந்திருக்கின்றது.

இந்தச் செய்யுள்களில், மயில் என்ற சொல் மயிற் பறவையைக் குறிக்காது தமயந்தியைஉணர்த்துவதால் இதுவும் இங்கு ஒரு ஆகுபெயர். ஆனால் குணஆகு பெயர் அன்று. ஏனெனில், மயில் ஒரு குணமல்லவே. காரிகை - அழகு. அழகு ஒரு குணம், அந்தக் குணத்தை உடைய காரணத்தால் ஒருத்தியும் காரிகை ஆனாள். மயில் குணமன்று. மயிலை உடையவள் என்ற காரணத்தால் தமயந்தியை மயில் என்று சொல்லவும் இல்லை. சாயலில் மயிலைப் போன்றவளா யிருத்தலால், மயில் என்பது இங்கு ஒரு பெண்ணிற்கு ஆகின்றது. அதாவது மயிலைத் தனக்கு உவமையாய் உடையவள். இப்படி உவமையாய்க் கூறப்படுகின்ற பொருளுக்கு உரிய பதமே, எதற்கு அது உவமையோ அதனையே நேராகக் குறித்துவிடுமானால் அப்பொழுது உவமை யாகுபெயர் என்று பெயர். ஆதலால மயில் இங்கு உவமையாகுபெயராய் ஒரு பெண்ணை உணர்த்தியது. 'புகழேந்தி வாய்திறந்தால் தேன் பொழியும்,' என்று ஒரு வாக்கியம் அமைத்தால், அதில் தேன் என்பது தேன் போன்ற சொற்களைக் காட்டுவதால் உவமையாகுபெயரே. இனி ஊர்சிரிக்கும், நாடெல்லாம் கலங்கியது, என்ற உதாரணங்களைக் கொண்டு முன்னொருசமயம் விளக்கியிருக்கின்ற இடஆகுபெயரையும் இங்கு ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்.

குன்றுடையானும் மக்களும்

[108-வது பக்கத் தொடர்ச்சி]

5. குன்றுடையான் தான் பிறந்த ஊருக்குப் போனது.

மந்தை கடந்து, எல்லை கடந்து, காடு கடந்து, மலை கடந்து, இரண்டு நாள் வழிநடந்து, குன்றுடையானும் மனைவியும் ஓமந்தூரை யடைந்தார்கள். அரசடி விநாயகன் கோவிலில் சுமையிறக்கிவைத்து, ஆடுமாடுகளைக் கட்டி, மனைவியை உட்கார்த்திக் குன்றுடையான் ஊரினுள்ளே சென்று சின்னசாமி ஐயரைக் கண்டான். ஐயரும் அவர்மனைவியும் அவனை மெய்யன்போடு உபசரித்து அளவளாவினார்கள். பின்பு குன்றுடையான் தனக்குக் குடியிருக்க ஒரு வீடு வேண்டும் என, ஐயர் மூன்று அங்கண இடங்கொண்ட ஒரு பழைய வீட்டைக் கொடுத்தார்.

குன்றுடையான் தன்மனைவியோடு அவ்வீட்டுக்குப் போய் ஆடுமாடுகளை வாசலிற் கட்டிவிட்டுத் திண்ணையில் உட்கார்ந்தான். தாமரை அவ்வீட்டைப் பெருக்கி, தன் தாயார் கொடுத்த அடிபோன கூடையால் மூன்று கூடை குப்பையைக் கூட்டி எறிந்து, சாணங்கொண்டு மெழுகினாள். பின்பு அவள் குளித்து முழுகி, சிவசிவா என்று சொல்லித் திருநீறணிந்து, பிராமணப் பெண்டிரிடத்தில் இரண்டுபடி அரிசியும், பாத்திரங்களும், ஐயன் சாப்பிடுவதற்கு ஒரு வாழையிலையும் கடன் வாங்கிவந்து சமையல் செய்தாள் ; வாழை இலையை இரு கீற்றாக்கி இரண்டு படைப்புப் படைத்தாள், இதற்குள் குன்றுடையானும் நீராடி, செல்லாண்டியம்மனை நினைந்து திருநீறணிந்து, மனைவி உண்ணும்படி உபசரிக்க, சாப்பிடும்பொருட்டு உட்கார்ந்தான்.

அவ்வேளையில் பட்டைநாமஞ் சாத்திய மூன்று தாசரிகள் சங்குப்பெட்டியைத் தோளிற் போட்டு, சேகண்டி யடித்துக்கொண்டு சங்கநாதஞ் செய்து வாசலில் நின்று அன்னம்கேட்டார்கள். சாப்பிடும் வேளையில் அவர்கள் வந்தமை நல்ல சகுனமென்று மகிழ்ந்து, கணவனும் மனைவியும் விரைந்தெழுந்து, அவர்களை யெதிர்கொண்டழைத்து, உள்ளே இட்டுக்கொண்டுபோய் உபசரித்தார்கள். தாமரை பிராமணப் பெண்டிரிடம் சென்று, பின்னும் ஒரு வாழையிலை வாங்கி வந்து, கணவனோடு தாசரிகளையும் சேர இருத்தி இலைபோட்டுப் பரிமாறினாள். தாசரிகள் சங்குநாதஞ் செய்து, தாமரை பரிமாறப் பரிமாற வயிறுநிறையப் புசித்து, இரண்டு படியரிசிச் சோற்றையும் தீர்த்துவிட்டுக் கணவனையும் மனைவியையும் வாழ்த்திச் சென்றார்.

அவர்கள் போனபின்பு, குன்றுடையான் உண்ட இளைப்புத்தீரத் திண்ணையில் கம்பளியை விரித்து உட்கார்ந்திருக்கையில், தாமரை தன் கணவன் பக்கலில் வந்து நின்று, 'நாம் குடித்தனஞ்செய்யத் தலைப்பட்ட முதல்நாளில், முதற்சோறு சமைத்த வேளையிலேயே மூன்று தாசரிகளுக்குக் கொடுத்துண்ணும் பாக்கியம் கிடைத்தது நாம் செய்த புண்ணியமே' என்றாள். அது கேட்டுக் குன்றுடையான், 'தாமரை, ஏழைக்குத் தெய்வந் துணை. இந்தத் தாசரிகள் இப்பொழுது இங்கே வந்துபோனது அவ் ஈசன் செயலே. நாம் கடவுளை நம்பியிருந்தால் நமக்கு எப்பொழுதும் குறைவில்லை' என்று சொல்லி, உண்ட இளைப்பால் படுத்துச் சிறிது கண்ணயர்ந்தான். செய்த சமையலையெல்லாம் தாசரிகளுக்குப் பரிமாறிவிட்டுத் தாமரை அன்று பட்டினி கிடந்தாள். சமையல் முழுவதும் செலவாக, தாமரை பட்டினிகிடந்ததையும் குன்றுடையான் அறிந்தவனல்லன்; தன் வயிறு நிறைதலும் அவன் கவலையற்றுத் தூங்கலானான்.

மறுநாள்முதல் குன்றுடையான் ஐயன்மாருடைய எருமைகளைப் பழையபடி மேய்த்துவந்தான். அவன் எருமைமேய்க்கப் போனபிறகு தாமரை, கணவன் பாடுபடுகையில் தான் சும்மா இருப்பது முறையன்று என்றெண்ணி, பிராமணப் பெண்டிரிடஞ் சென்று, நெல்வாங்கிவந்து கூலிக்குக் குற்றுவாள். பத்து வள்ளநெல் குற்றினால் ஒருவள்ளக் குறுநொய் கூலி கிடைக்கும். நெல் குற்றுகையில் அவள் உலக்கையைக் கையிற் பிடித்து, திருவாலவாயானை நினைந்து, 'கடவுளே, நான் பிறந்த நாள்முதல் அரண்மனைவாசல் கடந்தறியேன் ; வீடு பெருக்கியறியேன்; வாசல் கூட்டி அறியேன். இப்பொழுது கூலிக்கு நெல்குற்ற விதித்தாயே ! ஈசா ! என்னைப்போல் பெண்ணும் உலகத்தில் இனி ஒருத்தி இருப்பாளா ? தந்தை கைவிட்டனர் ; தாய் கைவிட்டனள்; உடன் பிறந்தார் கைவிட்டனர். உற்றார் பெற்றோர் இல்லாத இவ்வூரில் தனியாய் நான் தவிக்கிறேன். அப்பனே, கூடத்துணையிரு. சூதறியாத என் மன்னவனைக் காப்பாற்று. என் குடி ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றவேண்டும். ஐயனே! இந்த நெல் குற்றத் துணையிருந்து எனக்குக் களைப்புத் தோன்றாமல் என்னைக் காத்தருள வேண்டும் : என்று சொல்லி இரந்து, குற்றுவாள். ஒருலக்கை கொண்டு குற்றினாளாயினும் பல உலக்கைகள் குற்றிய ஓசையைக் காதாற் கேட்டாள், பிறிதோருலக்கையையும் கண்ணிற் காணாதாள். ஒரு குந்தாணி நெல் அரை நாழிகையில் அரிசியாக மாறிற்று. இதுவும் ஈசன் செயலே என்றெண்ணித் தாமரை, களிப்புற்று, குற்றிய நெல்லைப் புடைத்து, அரிசி வேறு, உமி வேறு, குறுநொய்வேறு, தவிடு வேறு ஆக்கி, பிராமணப் பெண்டிரிடம் கொண்டுபோய் ஒப்புவிப்பாள்.

தாமரையின் அழகையும் உயர்குடிப் பிறப்பையுங் கண்டு, அன்பும் சிறிது அச்சமுங் கொண்டிருந்த அவ்வூர்ப் பிராமணப் பெண்டிர்கள், அவ்வளவு விரைவில் அவள் நெல் குற்றிக்கொண்டு வந்ததைப் பார்த்து வியப்புற்று, இரட்டைக்கூலி கொடுத்து, சமையலுக்கு வேண்டிய காய் கறிகளையும் உதவுவார்கள்.

தாமரைநாச்சி வீடுசேர்ந்து, குளித்து, கணவன் வருமுன் சமையல் முடித்துவைப்பாள். மத்தியானம் ஐயன் வீட்டுக்குவந்து, தன் மனைவி ஓட்டைச்செம்பில் கொடுத்த நீரைவாங்கிக் கைகால்களைக்கழுவி, திருநீறணிந்து சாப்பிடுவான் ; குறுநொய்ச் சோறும் காய்கறிகளும் கிடைத்த வகையைக் குறித்து மனைவியை ஒன்றும் கேளான். உண்டபின் சிறிது தூங்கி இளைப்பாறி மீண்டு எருமை மேய்க்கப் போவான்.

இவ்வாறாக ஐயன்மார் ஊரில் ஒரு வருடம் கழிந்தது.

ஒருநாள் இரவு கணவனும் மனைவியும் சாப்பாடு முடித்து, மங்கலாய் எரிந்த குத்துவிளக்கண்டை உட்

காந்து தங்கள் வாழ்வு தாழ்வுகளைக் குறித்து வார்த்தையாடுகையில் பேசிக்கொண்ட பேச்சு இது:—

‘அது இருக்கட்டும். நீங்கள் இப்படி எருமை மேய்த்தே காலங்கழிக்கலாமென்று இருக்கிறீர்கள் ?’

‘அடி, போ, பைத்தியகாரி. இங்கே இருக்கிற சுகம் நமக்கு வேறு எங்கே கிடைக்கும் ? எருமை மேய்த்து வந்து சாப்பிட்டுத் தூங்குவதுபோல் எளிதான வேலை வேறென்ன இருக்கிறது ? அந்தப் பங்காளிப் பயல்களிடத்தில் நான் பட்டபாட்டை நினைத்தாலும் இப்பொழுது கூட உடம்பு நடுங்குகிறதே ?

‘பங்காளிகள் உங்களை என்ன செய்தார்கள் ?’

‘என்ன செய்தார்கள் என்று கேட்கிறாய்? என் தகப்பனார் இறந்தபின், அவர்சம்பாதித்திருந்த சொத்தையெல்லாம் மூட்டைகட்டி எடுத்துக்கொண்டு, என்னையும் தங்களூருக்கு அழைத்துப்போய்ச் சொத்தைப் பங்கிட்டு ஆளுக்கொரு கூறு எடுத்துக்கொண்டார்கள். பன்னிரண்டு வருஷம் என்னை நன்றாகவே நடத்தினார்கள். அதற்குப் பின் பெண்சாதிகளுடைய வார்த்தையைக் கேட்டு, என்னைத் தண்ணீர் எடுக்கச் சொன்னார்கள் ; நாய்ச்சோறு சுமக்கச் செய்தார்கள் ; மாடுமேய்க்கப் போட்டார்கள். முதலில் கஞ்சியை யூற்றினார்கள், பின்பு சோற்றுநீரைக் கண்ணால் காண்பது கூட அரிதாயிற்று. நன்றாக உதைத்தார்கள் ; பிறகு கழுத்தைப் பிடித்து வெளியேதள்ளிக் கதவைத் தாழிட்டார்கள்.

‘உங்கள் பங்காளிகள் எத்தனை பேர் ?’

‘பன்னிரண்டு பேர்’

‘அவர்கள் இருக்கும் ஊரின் பெயர் என்ன ?’

‘பாய்ச்சலூர்.’

‘பங்காளிகளின் மனைவியர் எத்தகை குணம் உள்ளவர்கள் ?’

‘என்பங்காளிகளான அண்ணன்மாரைநம்பினாலும் நம்பலாம், அந்த முண்டைகளை நம்பலாமா ? அவர்கள் முறத்தாலும் விளக்குமாற்றாலும் என்னை அடித்த அடிகள் கணக்கில் அடங்குமா ? அவர்களைப் பேய்களென்றே சொல்லவேண்டும்.’

‘நீங்கள் வாழ்ந்திருந்த நாடு எது ?’

‘பொன்னுவள நாடு.’

‘அந்நாட்டில் ஆறுகுளங்களுண்டா ? வயல்வாய்க்கால்களுண்டா? மலைகளுண்டா? அது செழிப்பான நாடுதானா ?’

‘போடி, பைத்தியகாரி. பொன்னுவள நாட்டைப் போல் வேறுநாடு இந்தப் பூலோகத்தில் ஏது ? நான் பள்ளிக்கூடத்தில் படிக்கிற நாளில் எங்கள் வாத்தியார் அதைக் குறித்துச்சொன்ன பாட்டுகள் இரண்டொன்று இப்பொழுது நினைவுக்கு வருகின்றன. சொல்கிறேன், கேள்:

ஆலத்தூர்ப் பட்டணமாம் அழகு பொன்னு வளநாடு;
சிற்றூலைப் பட்டணமாம் சிறந்த பொன்னு வளநாடு;
காலால் மடைதிறந்தால் காதவழி நீர்பாயும்;
நெல்லு விளைந்து நின்ற சம்பா போரேறும்;
கரும்பு செழித்துக் கணுவுக்கொரு முத்தீனும்;
வாழை வடக்கீனும் வான்கமுகு தெற்கீனும்;
தாழை மலர்பொழிந்து தனிவாசம் வீசிநிற்கும்;
கட்டுக் கலங்காணும் கதிருழக்கு நெற்காணும்;
ஆனைகட்டத் தூர்விளையும் அண்டமுட்டப் போரேறும்;
மாங்கனிக்கு மந்திவந்து மகிழ்ந்து விளையாடும்;
தேங்கனிக்குள் பூங்கிளிகள் சேர்ந்து விளையாடும்;
செங்கனிகள் தாமுடைந்து செந்நெல் வயல்பாயும்;
மாங்கனிகள் தாமுடைந்து வயல்தோறும்பாய்ந்திடுமே

எங்கள் நாட்டையடுத்து வேடுவர் வாழும் கொங்கு நாடும், வீரமலை, தோகைமலை, வையமலை முதலிய மலைகளும் உண்டு. எங்கள் நாடு உங்கள் வெள்ளிவள நாட்டைப்போல் காய்ந்து கருவழிந்திருக்கும் என்று நினைத்தாயோ ?’

‘ஆ ! ஆ ! இவ்வளவு சிறப்பானதா, உங்கள் நாடு ? அது இருக்கட்டும். நீங்கள் குடியிருந்தது எந்த ஊர் ?’

‘சிற்றூலைப் பட்டணம்.’

‘அதுவும் செழிப்பான ஊர்தானா ?’

‘என்ன, அப்படிக்கேட்கிறாய் ? எங்கள் ஊருக்குப் பக்கத்திலுள்ள வேளாண்குளத்து நீரை ஓட்டி விட்டால் அது உங்கள் வெள்ளிவள நாடெல்லாம் பாயுமே. அந்தக்குளத்துக்கு மதகு வெண்கலத்தாலானது. வேறெங்கேயாவது வெண்கல மதகுண்டா ? கேட்டிருக்கிறாயா ?’

‘நான்கேட்டதில்லை. உங்கள்தகப்பனாருக்குக் காணி கல்வெட்டுகள் உண்டா ?’

‘என் தகப்பனாருக்குப் பருத்திக்காடு நூறுவள்ளமும், வேளாண்குளத்துப் பாய்ச்சலில் தொண்ணூற்றுறுவள்ள வயற்காடுகளும் உண்டு எங்கள் ஊருக்கு மேற்கேயுள்ள வீரமலையையடுத்த கானலிற் பாதி எங்களைச் சேர்ந்தது. அந்தக்கானலிற்பாதி சாகுபடிசெய்திருந்தோம் என் தாய்தந்தையர்கள் இறந்தபின்னும் எங்கள் அரண்மனை சிற்றூலைப் பட்டணத்தில் அப்படியே இருந்தது. இதற்குள் அது பார்ப்போரில்லாமல் குட்டிச்சுவராயிருக்கும் ?

‘உங்கள் தகப்பனாருக்கு என்னென்ன அதிகாரங்களிருந்தன ?’

‘என் தகப்பனார் வரகுதின்னாப் பெருங்குடியான் குலத்தில் பெரியதனக்காரர். சிற்றூலைப்பட்டணம், ஆலத்தூர் முதலிய பன்னிரண்டு பாளையங்கள் அவருக்குவசமாயிருந்தன அவர் எங்கள்நாட்டுக் கணக்கு மணியங்களை யெல்லாம் சோழராஜனுக்குக் கீழ்ப்பட்டுப் பார்த்துவந்தார். அவர் எங்கள் நாட்டுமுதற்குடி.’

‘உங்களுக்குரிய நிலங்களும் மிராசுகளும் இப்பொழுது யார்வசத்தி லிருக்கின்றன ?’

‘பங்காளிகள் வசத்தில்.’

‘இப்பொழுது நீங்கள் அவற்றைத் திரும்பக்கொடுக்கும்படி கேட்டால், பங்காளிகள் கொடுப்பார்களா ?

‘அடி, போ—பைத்தியகாரி நம்முடைய சொத்தைக் கேட்டால் கொடுக்காமல் அவர்கள் வைத்துக்கொள்ள முடியுமா ? அவர்கள் மூக்கில் தும்பைச் சாற்றைப் பிழிந்து வாங்கமாட்டேனா ?’

‘அவர்கள் கொடாவிடில் என்ன செய்வீர்கள் ?’

கொடாவிடில், என்னை யறிந்தவர் பத்துப்பேர் எங்கள் நாட்டிலில்லையா ? அவர்கள் சாக்ஷி சொல்லமாட்டார்களா ? மேலும், எல்லோர்க்கும் மேலாக அத்தேசத்து அரசன் சிவசோழ மன்னர் உறையூரிலிருக்கிறாரே. என் தந்தையும் பாட்டனும் அவருக்கு உழைப்பை செலுத்தி, அவரிடமிருந்து கணக்கு மணியங்களை வாங்கிவந்து ஆண்டார்களே. அவரும் இல்லையென்று சொல்வார் ?’

‘அப்படியானால் நாம் உங்கள் நாட்டுக்குப் போவோமா ?’

‘நீ போகவேண்டும் என்று சொன்னால் போகலாம்’.

‘உங்கள் நாடு இங்கிருந்து எவ்வளவு தூரம் ?’

‘இரண்டுநாள் பயணம்.’

இதைக் கேட்ட தாமரை சிறிதுசிந்தித்து, ‘நல்லது- நீங்கள் படுத்துக்கொள்ளுங்கள். நான் இதைக் குறித்து ஆலோசித்துச் சொல்கிறேன்’ என்று சொல்லித் தானும் படுத்துறங்கினாள்.

பின்னுஞ்சிலநாட் கழிந்தபின் ஒருநாள், குன்றுடையான் மத்தியானம் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுத் திண்ணையில் கம்பளியை விரித்துச் சிறிது இளைப்பாறும் பொருட்டுப் படுக்கையில், தாமரை பக்கத்தில் வந்து உட்கார்ந்து, ‘நாம் இங்கிருந்து உங்கள் தேசம் போவதைக் குறித்து யோசனை செய்தேன். நாம் போவதே நலம் என்று எனக்குத் தோன்றுகிறது. காராள வமிசத்தில் பிறந்தும் நீங்கள் எருமை மேய்த்துப் பிழைப்பது இழிவு. மேலும், நம்மை இகழ்ந்து கைவிட்ட என் தாய்தந்தையர்கள் அறிய நாமும் தலையெடுத்து வாழவேண்டாமா ? கடவுள் இருக்கிறார் நம்மைக் காப்பாற்ற. நாம் நமது நாடு சேர்ந்தபின் பிழைப்புக்கு வழிதேடுவோம். நீங்கள் இன்றுமாலை எருமைகளை ஓட்டிவந்து பிராமணர்களைப் பார்த்து விடைபெற்றுக் கொள்ளுங்கள். நாளைக்கு நல்ல நாள், விடியுமுன் இவ்வூரைவிட்டுப் போவோம்’ என்றாள்.

‘நல்லது, அப்படியே செய்வோம்’ என்று சொல்லிக் குன்றுடையான் கண்ணயர்ந்தான்.

குன்றுடையான் அன்று மாலை எருமைகளையோட்டிவந்து விடுத்து, சின்னசாமி ஐயரைக் கண்டு செய்தியைச் சொன்னான். ஐயர், ‘அப்பா, குன்றுடையாக் கவுண்டா, நீயும் உன் மனைவியும் எங்கள் ஊரில் கால் வைத்தபின், என் மனைவி கருத்தரித்து ஓர் ஆண் பிள்ளையைப் பெற்றெடுத்தாள். உன்னையும் உன்மனைவியையும் நாங்கள் தெய்வங்களாகப் பாவித்திருக்கிறோம். நீ போகிற இடத்திலே பாக்கியவானாய் வாழவேண்டும்,” என்று வாழ்த்தி, குன்றுடையானுக்கு ஒரு புதுக் கம்பளியும் இரண்டு புது வேட்டிகளும் கொடுத்தார். அவர் மனைவி, தாமரைநாச்சிக்கு ஒரு புதுச் சேலையும் மஞ்சளுங் குங்குமமும் கொடுத்தனுப்பினாள். குன்றுடையான் மற்றைப் பிராமணர்களிடத்தும் விடைபெற்று, வீட்டுக்கு வந்து சாப்பிட்டுப் படுத்து விடியற்காலையில் மனைவி யெழுப்ப எழுந்திருந்து, மாமியார் கொடுத்த சீதனங்களைக் கூடையிற் போட்டுக் கூடையை மனைவியின் தலையில் வைத்து, ஒற்றைக் கொம்பு மாட்டையும் பொக்கைவாய் ஆட்டையும் அவிழ்த்து ஓட்டிக்கொண்டு, மனைவி பின் தொடர, அவ்வையன்மார் ஊரை நீங்கிப் போயினான்.

போகிற வழியிலே, அங்கங்கே தோப்பு துரவுகள் கண்ட இடத்திலும் சிற்றூர்களிலும் தங்கி, சோறாக்கியுண்டு, இளைப்பாறி, கணவனும் மனைவியும் மூன்றாம் நாட்காலையில் சிற்றூலைப் பட்டணத்தை யடைந்தனர். அவ்வூர்ப் பிள்ளையார்கோவிலுக்குப் பக்கத்திலிருந்த சாவடியில் சுமையிறக்கி வைத்து, ஆடு மாடுகளைக் கட்டி, மனைவியை இருத்தி, குன்றுடையான், ‘அடி, தாமரை, நான் ஊருக்குள்ளே சென்று, பெரிய வீட்டுக் கவுண்டனைப் பார்த்து ஒரு வீடு கேட்டு வருகிறேன், நீ இங்கே இரு’ என்று சொல்லிப் போனான். பெரியவீட்டுக் கவுண்டன் எழுபதுவயது சென்ற ஒரு கிழவன் ; அப்பாக் கவுண்டனை நன்கு அறிந்தவன். அவன் குன்றுடையானைக் கண்டு, அவன் வரலாறு கேட்டறிந்து, ‘தப்பிப் பிழைத்துத் தலம் வந்து சேர்ந்தாயா, குன்றுடையாக் கவுண்டா ?’ என்று கூறி மூன்றங்கண வீடு ஒன்று கொடுத்து, “குன்றுடையாக் கவுண்டா, இன்னும் உனக்கு வேண்டியதை நமது வீட்டிலிருந்து வாங்கிக் கொண்டுபோ’ என்று சொல்லி யனுப்பினான்.

கணவனும் மனைவியும் ஆடுமாடுகளோடு அவ்வீட்டுக்குப் போய், வீட்டைச் சுத்தம்பண்ணி, திங்கட்கிழமை அமிர்தயோகத்தில் சிவசிவ என்று குடிபுகுந்தனர்.

—*=*—

பெண்பாலார்

[Arthur Schopenheaur on W0MEN]

[117-வது பக்கத் தொடர்ச்சி]

[ஷாபன்ஹௌரின் வியாசத்தின் இப்பாகத்தின் கருத்தும் அது அமைக்கப்பெற்றுள முறையும் தமிழிற்கு அயலானதாய் இருப்பதால் நேராக மொழிபெயர்க்காமல் அவரது கருத்தைத் தழுவி எழுதியுள்ளோம்.]

பாலினால் இழிந்தவர் பெண்களென்பதே நம்முன்னையோர் கையாண்ட கொள்கை. கீழ்நாட்டார்இன்றைக்கும் அக்கொள்கையேகொண்டவர். பெண்களின் இயல்பையும் அவர்க்குரிய இடத்தையும்பற்றிக் கீழை நாட்டவர் கொண்டுளமுடிவே உண்மையோடியைந்த முடிவாகும். பெண்பாலார்தம் சிறப்பென்றும் அவருக்குநாம் காட்டவேண்டிய மரியாதையென்றும் நாம் சொல்லித் திரிவதெல்லாம் பண்டைப் பிரஞ்சுக்காரர்களினிடமிருந்து கற்றதோர் செய்தி. அக்கொள்கையோவெனின் ட்யுடோனியக் கிறிஸ்தியப்பேதைமையிற் பிறந்தவோர் பிழை. இக்கொள்கைதான் பெண்பாலாரிடம் செருக்கையும் தருக்கையும் வளர்த்துவைக்கின்றது. மேனாட்டுப் பெண்களை நினைக்குங்கால், காசி மாநகரிலுள்ள வானரங்களின் ஞாபகமே எனக்கு எழுகின்றது. மனிதர் தமக்குக் காட்டும் பக்தியைக் கண்டு, தெய்விகத்தன்மையொன்று தாம் பெற்றுவிட்டதாகக் கருதியிருக்கின்ற அக் குரங்குகள், அவ்வெண்ணம் நிலைத்த மனத்தினால் அச்சமிலாது எதையும் தாம் செய்யலாமென்று துணிந்துவிடுகின்றன. பெண்களைப் பற்றிய இப் புதிய மேனாட்டுக்கொள்கையும் இவ்வாறு தீமையே புரிகின்றது.

மேனாடுகளில் பெண்பாலாரை அமர்த்தி யிருக்கின்ற இந்த உன்னதநிலை அவர்களுடைய இயற்கைக்கு அயலானது. நம் முன்னவரோ மாதர்களுக்கு இரண்டாவது இடமே தந்திருந்தனர். ஆடவனுடன் சம அந்தஸ்த்தும், அவனெதிர் தலைநிமிர்ந்து நிற்கும் உரிமையும் பெண்பாலாருக்குத் தகுதியுடையனவல்ல. அவர் இதுபோது பெற்றுள புதுநிலை மேனாட்டில் புரிந்துவருகின்றதீமைகளோ பலப்பல. பாலில்பிந்திய இம்மானுட இனம், அதனிற்குரிய இரண்டாவது இடத்திலேயேசேர்க்கப்படவேண்டும். நமதுகிரேக்கிய முன்னோர்களாலும் ரோமாபுரிப் பெரியோர்களாலும் அவமதிக்கப்பட்டதும், ஆசியாகண்டத்தவரால் சிரிக்கப்பெறுவதுமான இம்மானுடஇனம் இனியாவது ஐரோப்பாவில் அதற்குரிய அடுத்த இடத்தில் வைக்கப்பெறட்டும். பின், இப்பொழுது புகுந்துழக்கும் பெருமாட்டி தொல்லை (Lady-nuisance) ஐரோப்பாவை விட்டகலும். அப்பொழுது நமது சமூகவாழ்விலும் அரசியல் காரியத்திலும் சொற்கொண்டு சாற்ற வியலாத நன்மைகள் பற்பல ஏற்படும்; இது உறுதி, வெறும் வார்த்தையில்லை. பின்னர். † சாலிக் சட்டத்திற்கு (Salic Law) அவசியமிராது. இப்பொழுது பெருமாட்டி (Lady) என்றழைக்கப்படும் ஒன்று இருக்க வேண்டிய அவசியமே இல்லை. அது மனைவியாகவோ அல்லது சீக்கிரத்தில் மனைவியாகப்போகின்ற சிறுமியாகவோதா னிருக்கவேண்டும். மேலும், அது அடக்கம் கீழ்ப்படிவு சிக்கனம் முதலியகுணங்களை உடையதாய் வளர்க்கப்பட வேண்டும். இயற்கைக்கு மாறாகப் பெருமாட்டி என்னுமொரு விபரீதம் ஐரோப்பாவில் இருப்பதினாற்றான், எளிய வகுப்பினைச்சேர்ந்த பெண்பாலாரில் பெரும்பகுதியோர் கீழ்நாட்டிலுள்ள எளிய வகுப்புப் பெண்களைக்காட்டிலும் சந்தோஷமில்லாதவர்களாய் வாழநேர்கின்றது. பைரன் என்னும் ஆங்கிலப் புலவர்:—

“ பண்டைநாள் கிரேக்கியர் பெண்களுக்கு அளித்திருந்த நிலை சாலச்சிறந்தது. மற்று, தற்கால நிலையோவெனில் இயற்கையின் விபரீதமாய்ச் செயற்கை விகாரத்தோடும்கூடிய மத்தியகால மிருகநாகரிகத்தின் எஞ்சிய சிறு பகுதியாயிருக்கிறது. பெண்கள் மனைக்குரிய காரியங்களோடு அமைந்திருக்கவேண்டும். வெளியிடங்கள் வந்து ஆடவருடன் விவகரிப்பதும், தங்களுக்கும் உளதென்று உரிமைச்சமனை அளப்பதுமாகி, மனைவாழ்க்கைக்கு அயலாயதொன்றும் அவர்க்குக்கூடவேகூடாது. சிறிதுகல்வியும் மதப்படிப்பும் அவர்களுக்கும் அவசியமே. கலைப்பயிற்சியும் அரசியற்றுறையும் அவருக்கு அயலானவை. பக்திமார்க்கத்துறையினதும், மடைப்பள்ளித் துறையினதுமான நூற்பயிற்சிகளை மாதர்களுக்குத் தரலாம். ஓவியப் பயிற்சியும், நாட்டியப் பயிற்சியும் வேண்டற்பாலதே. தோட்டவேலைப் பயிற்சியும் சிறிது பெறலாம். பயிர்த்தொழில் வேலையிலும் ஒருவாறு ஈடுபடலாம். அவ்வளவே.............” என்று பெண்களது இயற்கையைப் பற்றியும் அவர்பெறவேண்டிய பயிற்சியைப்பற்றியும் வகுத்துக் கூறுகின்றார்.

ஐரோப்பாவில் கையாளப்பெறும் மணவிஷயமான சட்டங்கள் ஆடவரையும் பெண்களையும் சம அந்தஸ்துடையவராய்க் கருதுகின்றன. இது பிழையில்துவக்கமானது. நம்மிடை வழங்கிவரும்ஏகபத்னிமுறையில், (Monogamy) மணம் என்பது ஒருவரது உரிமையிற் பாதியை இழப்பது என்றும் கடமையில் இருமடங்கை வகிப்பது என்றும் பொருள்படலாகின்றது. ஆடவனோடு சமவுரிமை அளித்துள சட்டம், பெண்களுக்கு ஆண்தகைமையையும் ஆற்றலையும் உடன் தந்திருக்கவேண்டும். இயற்கை விதித்துள விதியும் கடந்து சட்டங்கள் பெண்களுக்கு உரிமையும் மரியாதையும் அளிக்கவளிக்க, அவ்வுரிமையையும் மரியாதையையும் அனுபவிப்பவர் தொகையோ அருகுகின்றது. அவர்போக எஞ்சியவர் இயற்கையில்பெற்றிருந்த உரிமையையும் இழந்தவர்களாகின்றனர்.

பிறகு ஷாபன்ஹார் ஏகபத்னி விவாக முறை, பெண்களுக்கு உரிமை அந்தஸ்து என்னும் ஞாபகத்தை வளர்ப்பதோடமையாமல், பலருக்குக் கலியாணமே ஆக மாட்டாமல் செய்துவிடுகின்றதென்றும், அதனால்பலர் கன்னிகளாகவோ அல்லது பணிப்பெண்களாகவோ இருக்கவும், வேலை இல்லாதுபோகுமேல் மானங்கெடவோ நேர்கின்றதென்றும், லண்டன்மாநகரத்தில் மாத்திரம் 80,000 விபசாரிகள் இருக்கின்றனர் என்றும், ஒருவன் பல பெண்களைக் கலியாணம் செய்துகொள்வதால், பெண்களுக்கு நலம் அதிகம் என்றும் பிழைப்பினிற்கு வழிதேடவேண்டியதில்லாவிட்டால் மானமுங் கற்பும் கெடவேண்டியதில்லையென்றும், அப்பொழுதே பெண்கள் தம் உரிமையில் ஞாபகத்தை வைக்காமல் பின் மனைவியும் தாயுமாய் அமைந்து சிறப்புறுவார் என்றும்கூறி மீண்டும் பின்வருமாறு தொடர்கின்றார் :—

“ இந்தியாவில் பெண்களுக்குச் சுதந்திரம் என்பது கிடையாது. மனுஸ்மிருதியின்படி, ஒரு பெண் தகப்பனது ஆதரவிலும், பிறகு கணவனது ஆதரவிலும், பிறகு பிள்ளை அல்லது உடன் பிறந்தார் ஆதரவிலும் இருக்கின்றார்கள். புருஷன் இறந்ததும் ஒரு பெண் உடன்கட்டை ஏறுதல் என்பது விரும்பத்தகாதவொன்றே. எனினும், புருஷன் இறந்தபின் ஒருத்தி, தனது கள்ளக்காதலனுடன் சுகமேயிருந்து கணவன் ஈட்டிவைத்துள பொருளைச் செலவழிப்பதென்பதும் விரும்பத்தகாத செய்தியன்றோ. இவ்விரு முறைக்கும் இடையான பாதையில் நடப்பவர் நிலை சீரிய நிலையேயாகும்”

பிறகு ஷாபன்ஹார் பெண்களுக்குச் சொத்துரிமை கூடாதென்றும், ஸ்பார்ட்டாவில் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சொத்துரிமையேஸ்பார்ட்டாதேசத்தின் வீழ்ச்சிக்குக்காரணம் என்றும் கூறுகின்றார்.

இயற்கையிலேயே பெண்கள் ஒருவர்துணையும் இல்லாமல் தனிநிற்கும் தன்மையர் அல்லர். எல்லா உரிமைகளையும் அடைந்துள ஒருபெண்ணையே எடுத்துக்கொள்வோம். அவளும் ஒரு புருஷனைத் துணையாக வைத்துக்கொண்டு அவன்வழி நிற்பதைக் காண்கின்றோம். பெண்களுக்குத் தங்களைநடத்திவைக்கும் எஜமானன் தேவை. அந்த எஜமானனும், சிறுபெண்களாயின் காதலனாகவும் வயதுமுதிர்ந்தவர்களாயின் மதத்தலைவனாகவும் அமையவேண்டும்.

[முற்றிற்று.]

†சாலிக்சட்டம் (Salic Law) என்பது பெண்கள்பட்டாபிஷேகம் செய்துகொண்டு ஆளுவதைத்தடுக்கும் ஒரு சட்டம்.

தினகர வெண்பா

[114-வது பக்கத் தொடர்ச்சி]

II. பொருட்பால்

அதி. 39. இறைமாட்சி

42 மன்னர்க்குச் சீமை வளம்பெறவென் றுலெளிதோ
செந்நெல்நீள் கோவைத் தினகரா-உன்னைப்போற்
காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்.

[1 மன்னவற்குச். 5 செந்நெல்சூழ்.]

அதி. 40. கல்வி

43 எண்ணுமெழுத்துநங் கண்ணென் றியம்பியசொற்
றிண்ணமே யாகுந் தினகரா—மண்ணின்மேற்
கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

[1-3 எண்ணுமெழுத் துங்கண் ணெனத்தகு. 4 மென்பதின் சொற்: மென்றோதிய சொற். 5-6 றிண்ண மெவர்க்குங்.]

அதி. 41. கல்லாமை

44 கல்லார்கள் நல்லோர்கள் கற்றோர் சபைநடுவே
செல்லா திருக்கிற் றினகரா—சொல்லில்
விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றோரோ டேனை யவர்.

[2 நல்லாரே: நல்லவரே. 8 பொல்லா.]

அதி. 42. கேள்வி

45 கற்றிலனே யாயினுங் கேட்க வஃதுணற்றுஞ்
சிற்றறிவை நீக்குந் தினகரா—முற்றும்
இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்.

[1-2 கற்றிலனாயினுங். 2 யானுலுவ். 4 வுறுகருத்திற்: வதுகருத்திற்.]

அதி. 43. அறிவுடைமை

46 ஓதி யறியுமறி வொன்றுமே போதுமுயர்
சேதுமட்டும் போற்றுந் தினகரா—போத
வறிவுடையா ரெல்லா முடைய ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்.

[4 போதும்ம; போதுமெனச். 9-15 வறிவுடையா ராவ தறிவா ரறிவிலா ரஃதறி கல்லா தவர்.]

அதி. 44. குற்றங்கடிதல்

47 ஆரூர்க் குழக்கன்றுக் கன்றோர் குலக்கன்றைத்
தேரூரு வித்தான் றினகரா—பாரூடு
தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு.

அதி. 45. பெரியாரைத்துணைக்கோடல்

48 ஆடுபல தேடலா மானமத யானையொன்று
தேட லரிதே தினகரா—காடில்
அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

[3 ரேனமதை. 4 யானையொன்றைத். 5-6 தேட வரிதன்றோ.]

அதி. 46. சிற்றினஞ்சேராமை

49 எய்தரிய புண்ணியவா னென்பதுநின் மைந்தரினுஞ்
செய்தியினுங் கண்டோந் தினகரா—பொய்யோ
மனந்தூயார்க் கெச்சநன் றாகு மினந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை.

[1. எய்தரிது. 4. மைந்தர்னுஞ். 5 செய்தியினும்.]

அதி. 47. தெரிந்துசெயல்வகை

50 ஈதலுமின் சொல்லு நலமென்று செய்தாலுந்
தீது வருமே தினகரா—ஆதலினால்
நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

[2-4. சொல்லுநல மென்னசெய்தா லுஞ்சிலர்க்குத் 3 மென்று செய்தா. 5 தீதுசெய; தீதுசெயு மன்றோ 6.]

அதி. 48. வலியறிதல்

51 மெய்யுலகி லொன்றை விசாரியா மற்பதறிச்
செய்யிற்கூ டாதே தினகரா—வைய
வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

[1-4 மெய்யல்லா தொன்றை விசாரியாதே பதறிச். 5-6 செய்யிலது வென்னுந்; செய்யிலது கூடாத்.]

அதி. 49. காலமறிதல்

52 காலங் கருதிக் கருமம் பகுறார்கள்
சீலம் பெரியோர் தினகரா—ஞாலம் [லும்
பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

அதி. 50. இடனறிதல்

53 ஓரிடத்தி லாற்ற லுடையா ரயலொருவர்
சேரிடத்தி லாற்றார் தினகரா—வாரி
நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலு
னீங்கி னதனைப் பிற.

[1-8 ஓடத்தி லாற்றலுடை யாராயதிலொருவர் சேடத்திலாதார் தினகரா-நாடில். 3-4 லுடையராயோ ரொருத்தர். 6 லாகாத்.]

அதி. 51. தெரிந்துதெளிதல்

54 ஆரார்க்கு நற்குணமு மல்லாத தூர்க்குணமுஞ்
சேரா திராது தினகரா—நேராய்க்
குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

[1 யார் யார்க்கு. 3 மல்லாது. 8 நேராக்.]

அதி. 52. தெரிந்துவினையாடல்

55 ஏற்பதல்ல வேகுருவி யின்கழுத்தி லேபனங்காய்
சேர்ப்பதென்ன கோவைத் தினகரா—நேர்ப்பாய்
இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்.

[5 சேர்க்குமதென்.]

அதி. 53. சுற்றந்தழால்

56 ஊரார்க்குச் சோறிடுவ ருற்றாரை யண்டையிலுஞ்
சேராத தென்ன தினகரா—காரியமோ
சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

[5 சேராரி.]

அதி. 54. பொச்சாவாமை

57 எந்தநெடுஞ் செல்வ மிருந்தாலுஞ் செய்கருமம்
சிந்தைமற வாதே தினகரா—அந்திபகல்
அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லைப்
பொச்சாப் புடையார்க்கு நன்று.

[15 நன்கு.]

அதி. 55. செங்கோன்மை

58 கள்ளரையுங் கொல்லுங் கபடரையுந் தெண்டித்தல்
தெள்ளிமைகாண் கோவைத் தினகரா—வுள்ளன்

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.
[3 கசடரையுங்.]

அதி. 56. கொடுங்கோன்மை

59 வெய்யகுல மன்னனென்று வேனுமென்று லாரு
செய்யலாங் கோவைத் தினகரா-கையிலே[மென்ன
வேலொடு நின்று னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்று னிரவு.
[1-2 வெய்யகொடு வேந்தனென்று. 3 வேண்டுமென்று. 4 லாகுமெனச்.]

அதி. 57. வெருவந்தசெய்யாமை

60 ஆவ தறியா ரவருக்கு வேறுபகை
தேவையில்லை கண்டாய் தினகரா—கோவக்
கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்.
[3 ரவருக்கே ; ரவர்களுக்கு. 4 வேறுவினை. 6 கோனூர்த்.]

அதி. 58. கண்ணோட்டம்

61 ஒன்று தனக்கு முறுப்பில்லா மன்னரெனத்
தின்று கொழுத்தென் தினகரா—என்றுங்
கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.
[3-4 மன்னவர்கள் முறுப்பற்ற. 6 தின்று கொழுத்தென்ன. 11. கண்ணோட்டம். 11-12 கண்ணுடவல்லாற்.]

அதி. 59. ஒற்றடல்

62 வெல்லுமுடிமன்னவற்குவேண்டுமிருகண்களுண்டு
தில்லைநடம் போற்றுந் தினகரா—சொல்லவோ
ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண்.
[1 வெல்லுமுடை. 2 மன்னருக்கு. 3 வேறுமிரு. 4கண்ணுண்டு. 5 தில்லைமடம். 13 தெற்றென்ப.]

அதி. 60. ஊக்கமுடைமை

63 நிந்திக்கு மற்ப நினைவுகளா லொன்றனையுஞ்
சிந்திக்கொண் ணாது தினகரா—புந்திக்குள்
உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.
[1 நிந்தைக்கு. 3-4 நினைவுள்ளா யொன்றுகளுஞ்;நினையுளா ரொன்றுகளுஞ். 5-6 சிந்திக்க வொண்ணார்.]

அதி. 61. மடியின்மை

64 உய்யு மனமடிக்க வொண்ணு தொருகருமஞ்
செய்யு மிடத்திற் றினகரா—மையா
மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னொன்னார்க்
கடிமை புகுத்தி விடும்.
[6-7 மிடத்துத் தினகரா]

அதி. 62. ஆள்வினையுடைமை

65 அய்யிருநா றுண்டுவிக்ர மாற்கனுக்குப் பட்டியுந்தா
தெய்வமுட னீந்தான் றினகரா-மெய்யாக [ன்
ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துளுற்று பவர்.
[8 மெய்யலவோ.]

அதி. 63. இடுக்கணழியாமை

66 ஒரு முலகிடுக்க ணுற்ற பொழுதீசன்
தீரநகை செய்தான் றினகரா—ஆரு
மிடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்.
[3 ணுள்ள. 3-4 னுற்ற பொழுதீசனது.]

அதி. 64. அமைச்சு

67 ஆனகுல மந்திரிநீ யாளுநு நான்சொலக்கேள்
தேன்மருவுங் கோவைத் தினகரா—தானே
பிரிதலும் பேணிக் கொளலும் பிரிந்தாற்
பொருதலும் வல்ல தமைச்சு.
[2 மந்திரியே. 5-6 தேன்மருவுஞ் சோலைத். 9 பிரித்தலும். 13 பொருத்தலும்.]

* —————— *

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

அங்கம் 2. களம் 1.

[113-வது பக்கத் தொடர்ச்சி]

தோற்றுவாய்

நாடகத்தின் நடுநிகழ்ச்சிக்கு ஏதுவா யிருக்கின்ற நோக்கங்களையும், பாத்திரங்களின் பூர்வ சரித்திரங்களையும் அவர் குணங்களையும் இதுகாறும் ஆங்காங்கே தோன்றும் சிறுசிறு குறிப்புக்களால் தெரிந்து கொள்ளும்படி ஷேக்ஸ்பியர் அமைத்துவைத்தார். உரோமாபுரி ஒருகாலத்தில் அரசனால் ஆளப்பட்டிருந்ததென்பதும், அவ்வரசர்களில் டார்க்வின் என்பவன் கொடுங்கோன்மை செலுத்தத் தலைப்பட்டபோது குடிகள், ப்ரூடஸின்முன்னோன் ஒருவனைத் தம்தலைவனாகக் கொண்டு அரசாட்சியை அழித்துக் குடியரசுமுறைக்கு மாற்றிவைத்தார்களென்பதும் தெரியவருகின்றது அதன்பின், உரோமாபுரியின் செல்வமும் செல்வாக்கும் அதிகரிக்கவும், சனங்களில் முதன்மையாயிருப்பவர் பலர் தத்தம் ஆற்றலால் அதிகாரத்தைத் தனித்தனி கைப்பற்ற அவாவினவர்களாய் ஒருவரோடொருவர் இகலியும் ஒருவரை யொருவர் அழித்தும் இறுதியில் எல்லாம், வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்னும்படி நடைபெறுவதாகி முடியலாற்று. இந்நாடகத்தின் கதை துவக்குவதற்குமுன்னர் இப்படித் தன்சொல் செல்ல நின்றவன் பாம்பே என்பவன். அப்பாம்பேயை, அவன் உற்றதுணைவனும் உறவினனுமாயிருந்த ஜூலியஸ் ஸீஸர், வேரோடும் தொலைத்து வெற்றியுடன் வருகின்ற செவ்வியில் நாடகம் திறக்கின்றது.

நாடகம் திறந்தபோது, நிகழ்ச்சிக்குக் களமாகிய உரோமாபுரி எப்படித் தோன்றுகின்றது? முன் பாம்பேயை ஒருமுறை தம் கண்ணாற்காணப் பெரிதுநாள் தவங்கிடந்த சனங்கள், இப்பொழுது அப் பாம்பேயின் பகைவனைப் பாராட்டி வரவேற்கத் திருவிழாக் கொண்டாடுகின்றனர். பாம்பேயினால் இச்சனங்கள் பெற்றது ஒன்றுமில்லை, இந்த ஸீஸரால் பெறுவது மொன்றுமில்லை. எனினும், காற்றோடு பறக்குமொரு துரும்புபோல் பொதுஜனங்கள் அவ்வப்போது எவருடைய பேரும் புகழும் பரவுகின்றதோ அவரையே, முன்பின் பாராமல் ஆராதிக்கத் தலைப்படுவர். இனி, இப் பொதுஜனங்களின் உரிமையைக் காப்பதற்கென்றமைந்த அவ்வதிகாரிகளின் நிலைமை என்ன? பாம்பேயினால் இவர்களும் ஒன்றும் பெற்றதில்லை; இந்த ஸீஸரால் பெறுவதற்கும் ஒன்றுமில்லை. எனினும் அதிகாரம், எவ்வளவு சிறியதேனும், அதன்சுவையைக்கண்டிருப்பதால், அவ்வப்போது எவன் ஆற்றல் அதிகம்உடையவன் ஆகின்றானோ அவனால் தம்முடைய அதிகாரத்திற்கு என்ன குறைவு நேருமோ என்று அஞ்சுகின்றனர். ஸீஸர் தம்மை அவமதிப்பான் என்ற அச்சமே, இவர்கள், தமக்குத் தாழ்ந்தஜனங்களை அவமதித்து நடத்தும்படி செய்கின்றது. இவ்வண்ணம் பொதுஜனங்களை ஆட்டிவைக்கின்ற சூத்திரம் பகுத்தறிவில்லாப் பேதைமை என்பதையும், அப்பொதுஜனங்களிலிருந்தே பிரிந்து உயர்கின்ற உத்தியோகத்தினரை ஆட்டிவைக்கின்ற சூத்திரம் அச்சம் என்பதையுமுதற்களத்தின் முதலங்கத்தில் மிகச் சில சொற்களால் யாதும் ஐயமின்றி ஷேக்ஸ்பியர் தெரிவிக்கலாயினர்.

காஸ்ஸியஸ், காஸ்க்கா, ஸின்னா, ஸிம்பர், ட்ரெபோனியஸ் முதலானோர் மூன்றாமினத்தவர். இவர் பெருமக்கள். நல்லதிர்ஷ்டம் இருக்குமானால் இவர்களும் சர்வாதிகாரி ஆயிருக்கலாம். அவர்களோ ஆகவில்லை. ஆகியிருக்கின்ற ஸீஸரை அவனது முழு வைபவத்தோடும் காண்கின்றனர். இவர்களை ஆட்டிவைக்கின்ற சூத்திரம் பொறாமை. இதனை ஷேக்ஸ்பியர், முதலங்கம் இரண்டாம்களத்தில் காஸ்ஸியஸ் மூலமாகத் தெரிவிக்கின்றனர். எல்லாருள்ளத்தையும் இப் பொறாமை பற்றிக்கொண்டிருந்ததேனும் காஸ்ஸியஸ் அதனை வெளிப்படுத்தத் துணியும்வரையில் மற்றவர் காத்துக்கொண்டிருந்தனர். பிறகு ஒவ்வொருவராய்த் தம் பொறாமையைத் தெரிவிக்கக்காண்கின்றோம். இப் பொறாமையே சதியாலோசனை இயக்கத்திற்கு ஆதாரமாயிற்று. பொதுநோக்கம் பொறாமையாயினும், இச் சதியாலோசனையில் சேர்ந்தவர் ஒவ்வொருவருக்கும் சிறப்பாகத் தனித்தனி வேறுவேறு நோக்கங்களும் இருந்தன. மாநாட இயக்கங்களுக்கெல்லாம்உரிய இவ் வியற்கையை ஷேக்ஸ்பியர் மறக்கவில்லை. இந்தச் சதிக் கொலைச் சங்கத்தினிற் சேர்ந்த ப்ரூடஸ்மாத்திரம் ஒருவாறு மற்றவர்களிலிருந்து வேறு பிரிந்து நிற்கின்றான் என்று கருதவேண்டும்

ப்ரூடஸை இயக்கிய சூத்திரம் என்ன? இதுவே இந் நாடகத்தில் தேடிக் கண்டுபிடிக்கவேண்டிய இரகசியம். ஷேக்ஸ்பியரின் குறிப்புக்கள் எதனைக் காட்டுகின்றன? இவ் விரண்டாம் களத்தின் முதலங்கத்தை ஓதிய பின்னரே அதனை ஆராய்ந்தறிய இயலும்.

அங்கம் 2. களம் 1.

இடம்:—உரோமாபுரி. ப்ரூடஸின் மனையைச்சூழ்ந்த தோட்டம்.

நூல்

[ப்ரூடஸ் வருகின்றான்].

ப்ரூடஸ் :—என்ன, லூஸியஸ், ஹோ! (1)—உடுக்களின் நடக்கையால் பகலிற் கெவ்வளவு அருகென்று நான் ஊகிக்க இயலவில்லை (2)—ஏ! லூஸியஸ்!—இவ்வளவு நன்றாகத் தூங்குங் குற்றம் என்னுடையதா யிருக்கலாகாதா (3)—எங்கு, லூஸியஸ், எங்கு! எழுந்திரு, ஏ ஏ, என்ன, லூஸியஸ்.

[லூஸியஸ் வருகின்றான்].

லூஸியஸ் :—என் தலைவ, அழைத்தனையோ?

ப்ரூடஸ்:—யான் ஓதுமறையில், லூஸியஸ், ஒரு விளக்குக் கொணர்ந்து வை. (4) அதனை ஏற்றியபின் இங்கு வந்து என்னைக் கூப்பிடு.

லூஸியஸ் :—செய்கின்றேன், தலைவ.

[லூஸியஸ் போகின்றான்].

ப்ரூடஸ் :-(5) அது அவனுடைய மரணத்தால் ஆதல் வேண்டும். பொதுவிற்காக அல்லாக்கால், அவனை வெறுக்க, என்வரையில், என்னைச் சார்ந்த தனிக் காரணம் ஒன்றும் அறிகிலேன். (6) முடி சூடப் பெறுவான். அது அவன் இயற்கையை எப்படி மாற்றுமோ, அதுவன்றோ கேள்வி : பாம்பினை வெளிக் கொணர்வது பிரகாசமுடைய பகற்பொழுதே. அப்பொழுதே ஜாக்கிரதையாய் நடக்கவேண்டியிருக்கின்றது. (7) முடிசூட்டுகின்றனையோ அவனை? அது—அதன் பிறகு, தன் இஷ்டப்படி தீதுசெய்ய அவனுக்குக் கொடுக்கு ஒன்று வைக்கின்றோம் என்னல் வேண்டும். பெரும்பதவி, ஆற்றலிலிருந்து

குறிப்பு

(1) இதற்குமுன் இரண்டு மூன்று முறை கூப்பிட்டும் லூஸியஸ் வாராமையால் ப்ரூடஸ் இரைந்து கூப்பிடுகின்றான். லூஸியஸ் என்பவன் ப்ரூடஸின் வேலையாள்.

(2) உடுக்கள் = நக்ஷத்திரங்கள். பகலிற் கெவ்வளவு அருகென்று = பொழுது விடிவதற்கு இன்னும் எவ்வளவு நேரமிருக்கின்றதென்று. ஆகாயம் தெளிவாயில்லாமையால் நக்ஷத்திரங்களைக்கொண்டு நாழிகையை அறிய முடியவில்லை என்று சொல்லிக்கொள்கின்றான் ப்ரூடஸ்.

(3) தூக்கத்தில் ஆழ்ந்திருப்பதால் லூஸியல் வரவில்லை என்பது உணர்ந்த ப்ரூடஸ், சிந்தனையினாலும் கவலையாலும் இரவெல்லாம் நித்திரைகொள்ளாத தன் நிலையையும், விசாரமற்றுத் தூங்கும் அவ்வேலையாளின் நிலையையும் ஒப்புநோக்கி, "ஐயோ, அப்படி நான் அமைதியுடன் தூங்குதற் கில்லையே" என்று பெருமூச்சு விடுகின்றான். உடல்தெரியாமல் தூங்குவது குற்றமென்று சிலர்கூறுவாராயினும், அக்குற்றமே தனக்கு இப்பொழுது வேண்டுமென்கின்றான்.

(4) ஓதும் அறை:—படிக்கின்ற அறை.

(5) லூஸியஸ் போனபின் ப்ரூடஸ் தனக்குள்ளே பேசிக்கொள்கின்ற இப்பாகம் மிகவும் முக்கியமானது. அவனுடைய, என்பது ஸீஸரைக்குறிப்பது வெளிப்படை எனினும், அது என்பது, எதைக் குறிக்கின்றதென்பது வாதிற்கிடமானதே? ஸீஸரின் மரணத்தால் எது ஆதல் வேண்டும் எனக் கருதுகின்றான்?—மேலே பார்ப்போம்.

(6) ஸீஸர் எனக்கு ஒரு தீங்கும் இழைத்ததில்லையாதலின், நான் என்னைச்சார்ந்த காரணம் எதையும்கொண்டு வெறுப்பதற்கில்லை. ஆகையால், பொதுவான தொன்றையே காரணமாகக் கொள்ளவேண்டும்.

(7) இது குளிர்தேசங்களில் நிகழ்வது. பகல் பிரகாசமாயிருக்கும்போது பாம்புகள் தம் வளைகளை விட்டுவெளிப் போந்து உலவும். ஸீஸரினிடத்தில் இப்பொழுது கெட்ட குணங்கள் ஒன்றுந் தோன்றவில்லை. தோன்றாமையினாலேயே அவனிடத்தில் கெட்ட குணங்கள் இல்லை என்று எண்ணலாகாது. புற்றினுள் பாம்புபோல் அவை அடங்கியிருக்கலாம். பிரகாசமாய் வெயில் காயும்போது பாம்புகள் வளையைவிட்டு வெளி வந்துலவத் தலைப்படுவதுபோல ஸீஸர் முடிசூடிக்கொண்டு விளங்க ஆரம்பித்தவுடன், அவனுக்குள்ளே அடங்கிக்கிடந்த தீயகுணங்களெல்லாம்

தயையைப் பிரிக்கும்பொழுது அதன்பயன் அவலமாகி விடுகின்றது(9) உம்-ஸீஸரைப்பற்றி உண்மையாகச் சொல்லுங்கால், அவனது பகுத்தறிவினும் மனோவிகாரங்கள் ஆட்சிகொண்ட நாள் யான் என்றும் அறிந்திலேன் (10). ஆயினும் என்!— அடக்கம், இள ஆசையின் ஏணி என்பது உலகறிந்ததொன்று (11) ஏறுபவன் அதன்பால் முகம் நிமிர்ந்து நோக்குகின்றான்; மற்று அவனே உச்சிப்படியை எய்தியபின், தான் ஏறியவத் தாழ்ந்த படிகளை அவமதித்தனனாய் அவ் வேணிக்குத் தன் முதுகைத் திருப்பி மேகத்தின்பால் தன் நோக்கத்தைப் போக்குகின்றான். (12) அப்படியே ஸீஸர் செய்யலாம். எனின், செய்யமாட்டாதபடி தடுத்திடு— அவன் இப்போதிருப்பதற்கு இச்சண்டை இயையும் வண்ணம் அமைய வில்லையாதலின் அதனை இம்மாதிரி உருப்படுத்து. (13) அவன் எதாயிருக்கின்றானோ அது அதிகப் படுமாயின் இந்தஇந்த முடிவுகளுக்குப் பாய்ந்துவிடும்; ஆதலின், பொரித்த பின்னர்த் தன் இனத்திற் கிணங்கத் தீயதாய் வளருமொரு அரவின் முட்டையெனக் கருதி ஓட்டிலேயே கொன்றுவிடுக.

[லூவியஸ் மறுபடி வருகிறான்]

லூஸியஸ்:—ஐய, உன தறையில் விளக்கெரிகின்றது. சிகிமுகிக் கல்லிற்காக நான் சன்னலில் தேடவும், இப்படி முத்திரையிட்டு இக் காகிதத்தைக் கண்டேன். நான் படுக்கச்சென்றபோது இது அங்கு இருந்ததில்லை என்பது நிச்சயம்.

ப்ரூடஸ்.—மறுபடி நீ படுக்கப்போ; பொழுதுவிடியவில்லை. நாளையன்றோ, பைய, மார்ச்சுமத்தி?

லூஸியஸ்:—யானறியேன், ஐய.

ப்ரூடஸ்:—பஞ்சாங்கத்தைப் பார்த்து எனக்கு வந்து சொல்.

லூஸியஸ்:—சொல்கின்றேனைய.

[லூவியஸ் போகின்றான்].

ப்ரூடஸ்:—விண்ணிற் சீறுகின்ற கொள்ளிகள் (14), இவைகளை நான் படிப்பதற்கு வேண்டிய வெளிச்சம் கொடுக்கின்றன.

[கடிதத்தைத் திறந்து படிக்கின்றான்]

ப்ரூடஸே, நீ தூங்குகிறாய்; விழித்துக்கோள், உன்னையே பார்த்துக்கோள். உரோமாபுரியானது...சோல், அடி, அல்லலைத் தீர்—(15).

பரூடஸே, நீ தூங்குகிறாய்; விழித்துக்கொள்"...இத்தகைய தூண்டல்கள், நான் எடுத்துக்கொள்ளும்படி முன்னர்ப் பன்முறை போடப்பட்டிருக்கின்றன. "உரோமாபுரியானது......" இதனை யான் ஒட்டித் தொடர்புசெய்துகொள்ளவேண்டிய வகை இப்படி:—உரோமாபுரியானது ஒருவனுக்குப் பயந்து நிற்கலாமா—என்னிது! உரோமாபுரியோ? மன்னவனென்று அழைக்கப்பெற்றபோது டார்க்வினை எனது முன்னையோர் உரோமாபுரியின் தெருக்களினின்று துரத்தி யடித்தனர்.—"சொல், அடி, அல்லலைத் தீர்"—சொல்லவும் அடிக்கவும் யான் வேண்டப்படுகின்றேனோ? ஓ! உரோமாபுரியே நான் உனக்கு வாக்களிக்கின்றேன். நிவாரணம் தொடருமாயின், உன் முழு வேண்டுகோளையும் ப்ரூடவின் கைகளில் பெறுகின்றாய் (16).

வெளியாக ஆரம்பிக்கும். பாம்புகள் புற்றிலிருக்கும் வரையில் சனங்கள் பயமில்லாமல் நடமாடலாம்; அவை வெளியே திரிகின்றபோது ஜனங்கள் சாக்கிரதையா யிருக்க வேண்டும். அதுபோல், தற்காலம் ஸீஸரால் கேடு விளையாவிடினும், அவனுடைய அரசவைபவங்களாகிய வெயிலில் அவன் தீக்குணங்கள் தோன்றுவனவாகிச் சனங்களுக்கு ஆபத்து நேரலாம்.

(9) எய்திய பெரும் பதவியினால் ஆற்றல் அதிகம் உடையவனாகின்ற ஒருவன், அவ்வாற்றலைத்தயையின்றிச் செலுத்துவானாயின், அப்பதவி துர்வினியோகம் செய்யப்படுகின்றது—என்பது பொருள்.

(10) காமம் குரோதம் முதலிய மனோவிகாரங்களுக்கு ஆளாகி, அதனால் அறிவிழந்து ஸீஸர் எதனையும் செய்தானென நான் இதுகாறும் அறிந்ததில்லை. உண்மையைப் பேசுவதென்றால் இதனை நான் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

(11) இள ஆசை = முதிர்ந்து முற்றாத ஆசை. ஆசை கொண்டவர்கள் அது நிறைவேறும்பொருட்டு அடக்கமுடையவர்களா யிருப்பர். ஆசையை எய்துதற்கு ஏறும் ஒரு ஏணிபோல் அடக்கம் மனிதர்களுக்கு அமைகின்றது.

(12) ஏணியில் ஏறு மொருவன். உச்சிப்படியை அடையும்வரையில் அதற்கு முகங்கொடுத்தும் அதனை எதிர் நோக்கியும் இருக்க, உச்சிப்படியை அடைந்தபின் அப்புறம் தன்னை ஏற்றிய ஏணியை அலக்ஷியம் செய்து ஆகாசத்தைப் பார்ப்பதுபோல், மனிதரும் மிகவும் அடக்கமுடையவர்போல் நடித்து அவ்வடக்கத்தைக் கொண்டு தாம் ஆசைப்பட்டதை அடைந்தபின் அடக்கமெல்லாந் துறந்து செருக்குடையவர்களாய் மேன்மேலும் தம் நாட்டத்தைச் செலுத்தத் தலைப்படுகின்றனர்—என்பது பொருள்.

(13) ஸீஸர் செருக்கடைந்து தயையின்றித் தன் அதிகாரத்தைச் செலுத்துமொரு கொடியவனாய், இனி அவன் அரசன் என்னும் பதவியை அடைந்தபின், மாறினும் மாறலாம் என்கின்றேனே யொழிய இப்பொழுது அவன் இருக்கின்றபடி பார்க்கப்போனால் உண்மையில் அவன் மீது யாதும் குற்றம் சொல்வதற்கில்லை. ஆகையால், அவன் இருக்கின்ற தன்மையைக்கொண்டு அவனோடு சண்டையிட நியாயமில்லை. மற்று இச்சண்டைக்கோ ஒரு நியாயம் காட்டவேண்டுவது அவசியம். ஆதலின், இந்தச் சண்டைக்கு வேறோர் உருக்கொடுத்துவிடு—என்று தனக்குத்தானே சொல்லிக்கொள்கின்றான். அந்தப் போலிநியாயம் அடுத்து வருகின்றது.

(14) கொள்ளி—விழு நக்ஷத்திரம்.

(15) இது ப்ரூடஸ், கடிதத்திலிருந்து படித்த பாகம். இனி வருவது இதனைச்சார்ந்து அவன் பேசிக்கொள்வது. முன்களத்தின் இறுதியில் காஸ்ஸியஸ், ஸின்னாவினிடம் கொடுத்துப் போடும்படி அனுப்பிய கடிதங்களில் ஒன்றாக இருக்கவேண்டும் இது.

(16) கடிதத்தைப் படித்துப் படித்துத் தன்னுடைய கருத்தையும் உடனுக்குடன் தெரிவிக்கின்றான். உரோம நகரத்தவர்களே, நீங்கள் வேண்டும்படி நான் அடித்துவிடுகின்றேன்—அதனால், அல்லல் தீர்வதாயின் தீர்க, இல்லையேல் நான் என் செய—என்பது பொருள். "அது அவன் மரணத்தால் ஆகவேண்டும் என்று துவக்கிய புரூடஸ், அதனைச் செய்துவிட இறுதியில் துணிகின்றான். ஸீஸரைக் கொல்வதால் என்ன பயன் விளையவேண்டுமென்று எதிர்பார்க்கின்றான் இவன்? பொதுஜன நன்மையா, அல்லது இவன் சுயநல இலாபமா? முன்னதே இவன் கருத்து என்று ஷேக்ஸ்பியர் நூலாராய்ச்சியாளர் கூறுகின்றனர். அப்படியெனின், 'அது' என்பது, 'பொதுசன நன்மை' என்பதற்குப் பதிலாக நிற்கும். தன்னுடைய சுய இலாபம் ஸீஸரைக் கொன்றாற்றான் கிடைக்கும் என்பது அவன் கருத்தென இவ்வுரையை வரைகின்ற யான் கருதுகின்றேன்—இதன் நிச்சயத்தை இன்னும் சிறிது தூரம் சென்றபின் ஆராய்வோம்.

[லூவியஸ் வருகின்றான்]

லூஸியஸ்:—ஐய, மார்ச்சுமாதம் பதினைந்து நாட்கள் தேய்ந்துவிட்டது.

[வெளியே கதவை இடிக்கின்ற சப்தம் கேட்கின்றது.]

ப்ரூடஸ்:—நன்று, மனைவாயிலிற்குச் செல். யாரோ இடிக்கின்றார்.

[லூவியஸ் போகின்றான்.]

ஸீஸருக்கெதிராக என்னைக்காஸ்ஸியஸ் தீட்டியதிலிருந்து நான் தூங்கியதில்லை. (17) கொடியதொன்றைச் செய்துமுடிப்பதற்கும் முதல்இயக்கத்திற்கும் இடையுள்ள காலமெல்லாம், ஒரு மருள்போல் (18) அல்லது வெருவவரு மொரு கனவுபோல்இருக்கின்றது (19) அவ்விடைப்பொழுதில், மனச்சாக்ஷியும் மாநுடஇயற்கையும் மாறுபட்டு வாதுபுரிந்திருக்க, மனிதனதுநிலைமைதான், அராஜகக் கலகத்தால் வருந்துமொரு சிறு இராச்சியமேயனைய தாகின்றது (20).

(17) தீட்டியது - தூண்டியது. ஒருவனைக் கொல்லக் கத்தியைத் தீட்டுவதுபோல், ஸீஸரைக் கொல்ல ப்ருடஸைக் காஸியஸ் ஆயத்தம் செய்துவைத்தான் என்பது பொருள்.

(18) மருள் - பேய்த்தோற்றம்.

(19) கொடிய கருமமொன்றைச் செய்யத் துணிந்ததிலிருந்து அதை முடிக்கின்றவரையில் மனிதன், தன்வசமற்று மருண்டுகிடக்கின்றான்—என்பது பொருள்.

(20) இதற்கு நேரான ஆங்கிலவாக்கியத்தின் பொருள் இன்னதுதான் என்று நிச்சயமாய்த் தெளிந்தவரில்லை. எனினும் இம்மொழிபெயர்ப்பிலடங்கிய பொருளே ஷேக்ஸ்பியரின்கருத்திற்கும் ப்ரூடஸின் உள்ளக்கிடக்கைக்கும் நெருங்கியதாகும் என நினைக்கின்றோம். மாநுட இயற்கை என்பது இங்கு, ஆசை அச்சம் முதலிய மனோவிகாரங்களைக் குறிக்கின்றது. தீதுசெய்யாதே என்று தடுக்கின்ற மனச்சாக்ஷிக்குவிரோதமாய் ஆசாபாசங்கள் கலகம்செய்து மனிதன் நிலைகுலைந்து கலங்கும்படி உழக்குகின்றது. அந்நிலையை, அரசனுக்கு அடங்காமல் குடிமக்கள் அவனைத் தகர்க்கக் கலகஞ்செய்து எழநேர்ந்த ஒரு சிறு நாட்டின் நிலைக்கு ஒப்பாகக் கூறுகின்றான்.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[106-வது பக்கத் தொடர்ச்சி]

(X) பிரமாணத்தின் வகுப்புக்கள்

ஆங்கிலேயம் முதலிய மேல்நாட்டுத் தர்க்கங்களில், அநுமானப்பிரமாணம் ஒன்றைமட்டுமே காணலாம். அது, பிரதிஞ்ஞைகளின் முறையில் நிகமனம் செய்வது; இரண்டு அல்லது மூன்று அவயவங்களைக் கொண்டு நடைபெறும். நிகமனங்களுடைய விஷயபரிசோதனைத் தர்க்கமென்றும் (Deductive Logic), அவ்வாறின்றிப் பல ஏதுக்களால் வியாப்தியிலுள்ள ஆரோபனைகளைக் களைந்து அறியும் யதார்த்த நிரூபண தர்க்கமென்றும் (Inductive Logic) வகுக்கப்பட்டுளது. இவ்வாறு அநுமானப் பிரமாணம் ஒன்றிற்கே பயன்படுகின்றது மேல்நாட்டுத் தர்க்கம். நமது தருக்கமோ, பிரத்தியக்ஷம் அநுமானம் உவமானம் சப்தம் ஆகிய நால்வகை முறைகளில் யதார்த்தத்தை நன்கு ஆராய்ச்சிசெய்து, சற்பம் (Sophistry) விதண்டை (Cavilling), ஏத்துவாபாசம் (Fallacy) முதலியவற்றிற்கு இடங்கொடாமல் உண்மையான வாதத்திற்கு உரியதோர்சிறந்தகருவியாய்நிற்கும். பிரத்தியட்சத்தில் காணக்கூடியவற்றிற்கு அநுமானம் பயன்படாமல் அதுவிதண்டையாகவே முடியும். பிரயத்திட்சத்தில் சிவபெருமான் என்முன் நிற்கின்றார், ஆதலால் பச்சைஓலை நெருப்பில் வேகாது; அவர் சக்தியால் அது மூடப்பட்டிருக்கின்றது-என்று திருஞானசம்பந்தர் சமணர்களுக்குக்கூறி, அதை எவ்வாறு நான் அநுமானப்பிரமாணத்தில் பட்சங்கூற முடியுமென்கின்றார். பிரத்தியட்சப்பிரமாணத்திற்குப் பிரத்தியட்சமே சான்றாதலின், அநுமானத்தால் அதன் யதார்த்தத்தை நிர்ணயம்செய்தல், உயர்ந்த மனோதர்மத்தைத் தாழ்ந்த மிருகத்தன்மை வகையில் காட்டமுயல்வதுபோலாம்:—

கூட்டினார்கிளி யின்விருத்த
முரைத்ததோ ரொலியின்றொழில்
பாட்டுமெய்சொலிப் பக்கமேசெலு
மெக்கர்தங்களைப் பல்லறம்
காட்டியேவரு மாடெலாங்கவர்
கையரைக் கசிவொன்றிலாச்
சேட்டைகட் கெளியேனலென்
றிருவாலவா யரனிற்கவே

என்ற திருப்பாசுரத்தில், சொன்னதைச் சொல்லும் கூண்டிலுள்ள கிளிபோல, உண்மையான வேதமொழிகளை மேற்கோளாக எடுத்துக் கூறிய அந்தக்ஷணமே, யாதொரு யோசனையுமின்றி, சொல்லிய மேற்கோள்களுக்கு முரணானவகையில் பக்கங்கூறுவாய், என்று தர்க்கத்தில் பிரவேசிக்கும் எக்காரான இச்சமணருக்கு யான் யாதுரைப்பினும் பல்லைக்காட்டுகிறார்களேயன்றி அவர்களைக் கசியச்செய்ய முடியவில்லையே யென்று புகலிமன்னர் வருந்துகின்றார். மற்றும்

ஆகமத்தொடு மந்திரங்க
ளமைந்தசங்கத பங்கமாப்
பாகதத்தொ டிரைத்துரைத்த
சனங்கள்வெட்குறு பக்கமா
மாகதக்கரி போற்றிரிந்து
புரிந்துநின்றுணு மாசுசேர்
ஆகதர்க்கெளி யேனலேன்றிரு
வாலவாயர னிற்கவே

*   *   *   *

பந்தணம்மவை யொன்றிலம்பரி
வொன்றிலம்மென வாசக
மந்தணம்பல பேசிமாசறு
சீர்மையின்றிய நாயமே
அந்தணம்மரு கந்தணம்மது
புத்தணம்மது சித்தணச்
சிந்தணர்க்கெளி யேனலேன்றிரு
வாலவாயர னிற்கவே

என்று, ஒத்தொவ்வாமை மொழியும் சித்திரர்களான சாக்கியர்களுக்கு, சிவபெருமான் திருவடி பொய்த்தவ வழியால் சித்தியாதென்பதை நிரூபிக்கின்றார். சப்தப் பிரமாணத்தை அலட்சியம் செய்கின்றவர்களுக்குப் பிரத்தியக்ஷமெல்லாம் வேறுபாடாய்க் காணப்படுவதால் தர்க்கம் பயன்படா தென்பர். இனி, பிரத்தியட்சமாவது யாதென ஆராய்வோம்:—

I. பிரத்தியட்சம் (i) காணப்படுவன.

பிரத்தியட்சம் என்றால் காணப்படுவது என்றாகும். ஆயினும் (காண்டல்) கண் அட்சம் என்னும் பதங்கள் பஞ்சேந்திரியங்களில் ஒன்றாகிய நயனத்தை மாத்திரம் குறிக்குமாயினும், ஐந்து பொறிகளாலும் அறியப்படும் சாக்ஷாத்காரிப் பிரமை உண்டாக்குவன யாவும் காட்சியென்னும் பதத்தால் தருக்கத்தில் அழைக்கப்படுமென்பர். தொல்காப்பியனார் ஆறுவது அறிவு மனத்தால் ஜனிக்கும் அறிவெனக் கொண்டவாறு, தருக்கத்தில் மானசப்பிரமையும் பிரத்தியட்சமெனவே கொள்ளப்படும்.

வென்றானைப்புல னைந்துமென் றீவினை
கொன்றானைக்குணத் தாலே வணங்கிடா
நன்றா னம்மனம் வைத்திடு ஞானமாம்
ஒன்றானைக்கண்டு கோண்டதென் னுள்ளமே

உள்ளத் திருக்குறுந்தொகை 7.

எனவே இந்திரியத்தாலும் மனத்தாலும் தோன்றுகின்றவைகளைச்சாக்ஷாத்காரி பிரமையென்பர். அதைச் சவிகற்ப நிர்விகற்பக் கூறுபாட்டால் இருவகையாயும்; அதன் காரணங்களை, ஓரிடத்திந்திரியம் ஓரிடத்துப் பொருளிந்திரியக்கூட்டம், ஓரிடத்து ஞானம், என்று மூவகையாகவும் கொள்ளுவது தருக்கம். ஆயினும், ஆராயுங்கால் சவிகற்பங்களெல்லாம் நிர்விகற்பத்தினுள்ளடங்கி வெளியாவன வென்றும், பெயரைச் சொன்னவளவில் அதைப்பற்றிச் சிந்தியாதது நிர்விகற்பமும்,சிந்தித்துப் பன்முகத்தா லறிவது சவிகற்பமும் ஆகுமென்றும் மானத சாஸ்திரத்தில் அறியலாம். அவ்வாறே, ஓரிடத்து இந்திரியம் பொருளிந்திரியக் கூட்டம் ஞானம் என்பன மூன்றும் கிஞ்சித்தேனுமிராது ஒழியா தென்பது மானதசாஸ்திர உண்மையாதலால், இவற்றைத் தனித்தனி காரணங்களாய்ப் பிரித்து, ஒவ்வொன்றும் தனியே நிகழ்வதுபோல் பகர்வது இயற்கைக்குப் பொருந்தாததாகும். எது பலமாக மேல்நோக்குமோ அதையே அத்தருணத்தில் கரணமென்பது வழக்கு. இம் மூன்று கரணங்களும் சற்றேனும் சம்பந்தப்பட்டாலன்றிப் பிரமை யுண்டாகாதென்பது மானதசாஸ்திரத்தின் துணிபு. இதனையொட்டியே அப்பரும்,

ஒன்றுந் தானறி யாருல கத்தவர்
நின்று சோல்லி நிகழ்ந்த நினைப்பிலர்
தன்று வார்பொழில் தோணிபு ரவர்தங்
கொன்றை சூடுங் குறிப்பது வாகுமே.

திருத்தோணிபுரம் - திருக்குறுந்தொகை. 7.

என்று, நினைப்பு அல்லது ஞாபகமே நான்கு வகைப் பிரமாணங்களுக்கும் கருவியாகும் எனக் கூறுவார்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—2. சரபங்கர் பிறப்பு நீங்கு படலம்.

[116-வது பக்கத் தொடர்ச்சி]

முடனு முனைவனுந் தேடரு கடவுள்.

சரபங்கனுக்கு முன்சென்று தன்னுரை பங்கமாகி மீண்ட இந்திரன், நான்மறையின் கனியாகிய இராமனைத் தன்னெதிரே இம்மண்ணுலகில் காணலுற்றான். காண்டலும், "எம்முடைய இடுக்கணைக்காக்கவன்றோ மலரயனே முதலாய வேதியரும், தவவரும் தேவர்களும் மறைநான்கும் தேடிக் காணாப் பதஞ் சிவப்ப இக் காடும் மலையுங் கடந்து வருந்தநேர்கின்றது" என மனம்நொந்து கவன்றனனாய் இராமனைத் தொழுது துதிக்கின்ற பாசுரங்கள் எண்ணரிய அருமை வாய்ந்தன. அவைகளிலடங்கிய கருத்தின் ஆழமும், சொற்களின் செறிவும், தத்துவப் போதனைகளும் கம்பரது கடவுள் அனுபவத்தின் மெய்ம்மையையும் தூய்மையையும் விளக்கிக்காட்டுந் தன்மையன. அவ்விந்திரன்,

துவசமார் தொல்லமருட் டுன்னாரைச் செற்றுஞ்
சுருதிப் பெருங்கடலின் சொற்பொருள் கற்பித்துந்
திவசமா நல்லறத்தின் செந்நெறியி னுய்த்துந்
திருவளித்தும் வீடளித்துஞ் சிங்காமைத் தங்கள்
கவசமா யாருயிராய்த் தவமாய்க் கண்ணாய்க்
கடையிலா ஞானமாய்க் காப்பானைக் காணா
அவசமாய்ச் சிந்தையழிந் தயலேநின்று னறியாதான்
போல வறிந்த வெலாஞ் சொல்வான்

[வெற்றிக்கொடிகள் நிறைந்த பழைய யுத்தங்களில், பகைவர்களைக் கொன்றும், வேதங்களாகிய பெரியகடலின் சொற்களையும் பொருள்களையும் கற்பித்தும், தினந்தோறும் நல்ல அறத்தின் செம்மையாகிய நெறியில் கொண்டுசேர்த்தும், செல்வத்தைக் கொடுத்தும், மோக்ஷத்தை அளித்தும், அழியாதபடி தங்களைக் காக்கின்ற கவசம் ஆகியும், தங்கள் உயிராகியும், தவமாகியும், கண்களாகியும், முடிவில்லாத ஞானமாகியும்,காக்கின்ற இராமபிரானைக் கண்டு மனமுருகி ஒன்றும் தெரியாதவன் போலவே, தான் அறிந்த அவ்விராமபிரானது மகிமைகளையெல்லாம் கூறலாயினான்.]

என்று இந்திரன்செய் துதிக்கு முன்னுரை கூறுகின்றார் கம்பர். அறியாதான்போல அறிந்தவெலாம் சொன்னான் என்னும் இச்சூழ்ச்சியில் கடவுளைப்பற்றிய மெய்ஞ்ஞானத்தின் இரகசிய உண்மை அவ்வளவும் அடங்கியிருக்கின்றது. கடவுளின் தன்மையை அறியவல்லேமல்லே மென்பதை அறிவதே அக் கடவுளைப்பற்றி அறிந்தவெல்லாம் ஆகின்றதாதலின், அத்தகைய அறிவில் இந்திரன் குறையா திருந்தகொள்கை குறிக்கப்படுகின்றது. இன்னதோர் தன்மையனாகிய இந்திரன், எம்மனோர் உள்ளத்தை யெல்லாம் தன்வயமாக்கிக் கொண்டு, வில்லுங் கையுமாய் எதிர்நின்ற இராமனைப் பின்வருமாறு பாவலுற்றான்:—

தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது நின்ற
சுடரே தொடக்கறுத்தோர் சுற்றமே பற்றி
நீந்த வரிய நெடுங்கருணைக் கெல்லா
நிலயமே வேத நெறிமுறையி னேடி
ஆய்ந்த வுணர்வி னுணர்வே பகையா
லலைப்புண் டடியே மடிபோற்ற வந்நாள்
ஈந்த வரமுதவ வெய்தினையே யெந்தா
யிருநிலத் தவோநின் னிணையடித் தாமரைதாம்

[எல்லாப் பொருள்களிலும் தோய்ந்தும் தோயாமலும் நின்ற சோதியே, பற்றற்றவர்களுக்கு உற்ற உறவினனே, ஒன்றினைப்பற்றிக் கடந்து எல்லைகாண இயலாத கருணைக்கெல்லாம் இருப்பிடமானவனே, வேதங்களில் கூறியிருக்கின்ற வழிமுறைகளால் தேடி ஆராய்ந்தறிந்த உணர்விற்கு உணர்வாக இருப்பவனே, எமக்குத் தாயுந் தந்தையுமானவனே, உன் அடியவர்களாகிய யாங்கள் பகைவர்களால் மிகவருந்தி உன் திருவடிகளை வணங்க அப்பொழுது நீ கொடுத்தருளிய வரத்தின்படி எம்மைக் காத்து உதவ இப்பொழுது வந்து அருளினையே. உன் இரண்டு பாதத்தாமரைகள் இந்த மண்ணுலகில் பட நிற்குமிது நிச்சயந்தானோ]

மேவா தவரில்லை மேவினரு மில்லை
வெளியோ டிருளில்லை மேல்கீழு மில்லை
மூவாமை யில்லை மூத்தமையு மில்லை
முதலிடையோ டிறில்லை முன்னொடு பின்னில்லை
தேவாநின் கிவ்வோ நீசென்ற நிலையென்றாற்
சிலையேந்தி வந்தெம்மைச் சேவடிக ளோவக்

காவா தொழியிற் பழிபெரிதோ வன்றேற்
கருங்கடலிற் கண்வளராய் கைம்மாறு முண்டோ

[தேவனே, உனக்குப் பகைவர் இல்லை, நண்பர்களும் இல்லை; ஒளியும் இல்லை இருளும் இல்லை. மேலுமில்லை கீழுமில்லை. முதுமையுமில்லை, இளமையும் இல்லை. முன்னுமில்லை, பின்னும் இல்லை. முதலும் நடுவும் கடையும் இல்லை, நீ அடைந்த நிலைமை இங்கு இவைகளோ என்றால், வில்லை ஏந்திக்கொண்டு சிவந்த திருவடிகள் நோவ நடந்துவந்து எங்களை நீ முன் வரமளித்தபடி காக்காமற் போனால் அதனால் உனக்குப் பெரும் பழி வந்து சேருமோ! ஆதலால், நீ சென்று மீண்டும் உன்பெரிய பாற்கடலில் துயில்கொள்ளக் கடவாய். அல்லாமல் நீஇவ்வுதவி புரிவதற்கு ஈடாகநாங்கள் செய்யவல்ல கைம்மாறுமுளதோ]

நாழி நவைதீ ருலகெலா மாக
நளினத்து நீதந்த நான்முகனார் தாமே
ஊழி பலவு நின்றளந்தா லொன்று
முலவாப் பெருங்குணத்த வுத்தமனே மேனாள்
தாழி தரையாகத் தண்டயிர் நீராகத்
தடவரையே மத்தாகத் தாமரைக்கை நோவ
ஆழி கடைந்தமுத மெங்களுக்கே யீந்தாய்
அவுணர்கடா நின்னடிமை யல்லாமை யுண்டோ

[உன் உந்திக்கமலத்திலிருந்து நீ ஈன்று அளித்த பிரம்மதேவனே, குற்றமற்ற உலகங்களையெல்லாம் படியாகக் கொண்டு பற்பல ஊழிக்காலம் ஓயாமல் அளந்தாலும் முடியாத மிகுந்த குணங்களையுடைய உத்தமனே, முற்காலத்தில், பூமி தாழியாகவும் பாற்கடலே குளிர்ந்த தயிர் ஆகவும், பெரிய மந்தரமலையே மத்தாகவும் உன் தாமரை போன்ற கைகள் நோகும்படி கடலைக்கடைந்து எடுத்த அமிர்தத்தை எங்களுக்கு மாத்திரமே கொடுத்தாய். அசுரர்கள்மட்டும் உன்னுடைய அடிமைகள் ஆகமாட்டார் என்பது உண்டோ]

அசுரர் தீவினைகள் செய்பவராதலின் அவர்களுக்கு அமுதம் அளித்திலன் என்றாலும் அது ஏற்பதற்குரியதன்று. ஏனெனில்,

ஒன்றாகி மூலத் துருவம் பலவாகி
உணர்வு முயிரும் பிறிதாகி யூழி
சென்று சறுங்கா லத்தந்நிலை யதாகித்
திறத்துலகந் தானாகிச் செஞ்செவே நின்ற
நன்றாய ஞானத் தனிக்கொழுந்தே நங்க
ணவைதீர்க்கு நாயகமே நல்வினையேநோக்கி
நின்றாரைக் காத்தி யயற்பேரைக் காய்தி
நிலையில்லாத் தீவினையு நீதந்த தன்றே.

[மூலம் ஒன்றாகியும் உருவம் பலவாகியும், உணர்வும் உயிரும் மற்றவைகளும் ஆகியும், ஊழி அடைந்து முடியும் காலத்தில் அந்நிலையை எய்தியும், மீண்டும் பலதிறப்பட்ட உலகங்களாகியும் செவ்விதின் நின்ற நல்ல ஞானத்தின் ஒப்பற்ற கொழுந்தே, எங்கள் தீமைகளைப் போக்குகின்ற நாயகமே, நீ நல்லவைகளையே கருதிக் கடைப்பிடிப்பவர்களைக் காக்கின்றாய், மற்றவர்களை அழிக்கின்றாய், ஆயினும், நிலையில்லாத அந்தத் தீவினையைத் தந்ததும் நீயேயன்றோ !]

வல்லைவரம் பில்லாத மாயவினை தன்னான்
மயங்கினரோ டெய்திமதி மயங்கி மேனா
ளல்லை யிறைவனீ யாதியெனப் பேதுற்
றலமருவே முன்னையறப் பயனுண் டாக
வெல்லை வலயங்க ணின்னுழையென் றந்நா
ளெரியோனைத் தீண்டி யெழுவரொ னின்ற
தொல்லை முதன்முனிவர் சூளுற்ற போதே
தொகைநின்ற வையந் துடைத்திலையோ வெந்தாய்

[எந்தாய், முன்னொரு காலத்தில் வரம்பற்ற மாயையின் சூழ்ச்சிகளால் நீ இறைவன் அல்லை என்றும் ஆகின்றாயென்றும் மாறுபட்டு மயங்கிக்கிடந்த முனிவர் தேவர் முதலாயினோருடன் வந்து, அறிவுதிகைத்துத் தடுமாறுகின்ற எங்களுக்கு எதிரில் அப்பொழுது, எங்கள் அறத்தின் பயன் கைகூடினமையால், விரைவாக, பழைய ஸப்தரிஷிகள் பரமசிவனைத் தீண்டி மீண்டு வந்து எல்லா உலகங்களினது எல்லையும் உன்னிடத்தே தோன்றி வளர்ந்து வருபவை என்று நிச்சயஞ்செய்த காலத்தே தொக்கு நின்ற சந்தேகத்தை நீ தீர்க்கவில்லையோ]

இவையனைத்தும் இந்திரன், அறியாதான்போல அறிந்தவெலாம் இயம்பினனோ, அல்லது அறிந்தான்போல் அறியாதன வெல்லாம் இயம்பினனோ வென்ன நம்மனோரை அலமரச் செய்கின்றது. இவ்விடயத்தில் யாரே முற்றிலும் ஐயமற அறிந்தவராவார். பிற்றைநாள் அரவநெடும்படைக் குடைந்தான்போல் போர்க்களத்திற்கிடந்த இராமனை அண்ணல்கலுழன் அணுகி,

முனைவர்க்கு மொத்தி யமரர்க்கு மொத்தி
முழுமூட ரென்றிம் முதலோர்
அனைவர்க்கு மொத்தி யறியாமை யாரிவ்
வதிரேக மாயை யறிவார்.

என்று அதிசயித்தது போல், அறிந்தேன் என்னும் முழுமூடனும் அறியேன் என்னும் முனைவனும் அந்தத்தில் ஒன்றேயாகி ஒழிகின்றார். "அவுணரும் உன்னடியாராக, தீவினையும் நீ தந்ததாக, அவர்தமை நீ காய்வது ஏன்" என்று இந்திரன் இங்கு வினவிய அதிசயத்தை, பின் கலுழன் வேறோர் அதிசயத்தால் விளக்குவான்போல்,

சொல்லொன் றுரைத்தி பொருளாதி தூய
மறையுந் துறந்து திரிவாய்
வில்லொன் றெடுத்தி சரமொன் றெடுத்தி
மிளிர்சங்க மங்கை யுடையாய்
கொல்லென் றுரைத்தி கொலையுண்டு நிற்றி
கொடியாயுன் மாயை யறியேன்
அல்லென்று நிற்றி பகலாதி யாரிவ்
வதிரேக மாயை யறிவார்

என வருக்கும் பாசுரம் குறிக்கும் பொருளாலுமன்றி வகையாலும் பகவத்கீதையையே பலபடி ஒத்திருக்கின்றது. ஒருபுறம்நின்றுகொல்லென்றுஉரைப்பானும் மறுபுறஞ்சென்று கொலையுண்டு நிற்பானும் அவ்வொருவனே யாகின்றான் என்றக்கால்இதனை அங்கீகரித்து அமரும்வகையில் முழுமூடன் என்செய்வான்,அறிவினது எல்லையை அடைந்தேன்என எண்ணும் மூதறிஞன் தான் என் செய்வான். எல்லாம் தானேயாகிய அப்பரம்பொருள் எல்லார்க்கும் ஒன்றேயாகி நிற்பதும் நியாயமே.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

குழந்தைகளுக்கு :

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு
ஏமாறதீர்

லிமிடெட் ஸோல் ஏஜண்டு: கன்வஸர்ன், மதுரை.

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.

"நஞ்சன்கூடு பல்பொடி"

பிராஞ்ச: மதுரை.

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சமுகலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முடவுக்கு முயலவேண்டா. விளம்பிநெல் வெட்கக்கேடு. கல்லாத பேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம் பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R. B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் சிவசரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். ஏஜெட்டெனுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னுப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேணடும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது, முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

இந்திய இராணுவத்திற்காகத் தினம் ஒன்றிற்கு 14 லட்சம் ரூபாய் இந்திய அரசாங்கத்திற்குச் செலவாகின்றதாம்.

***

லண்டனில் முதன்முதல் கூடிய வட்டமேஜை மஹாநாட்டிற்கு 47228 பவுன் செலவாயிற்றும்; பிறகு இரண்டாமுறையாகக் கூடிய மஹாநாட்டிற்கு 59000 பவுன் செலவாயிற்றும்.

***

பண்டித மதனமோகன மாளவியாவின் எழுபதாவது பிறந்தநாள் காசி இந்து சர்வகலாசாலையில் பிப்பிரவரி மாதம் 11-ந்தேதி கொண்டாடப் பட்டதென்று காசிச் செய்தி கூறுகின்றது.

***

தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியாது நன்மைக்கென இந்தியஏஜண்டாக நியமனம்செய்யப்பட்டிருந்த ஸர் K. V. ரெட்டியவர்கள் தமது பதவியை விடுத்துவிட்டு இந்தியா திரும்புவார் என்றும், அவர் ஸ்தானத்தில் புதிய ஏஜெண்டு சீக்கிரத்தில் நியமிக்கப்பெறலாம் என்றும் தெரிகின்றது.

***

தபால் கட்டண விகிதங்களை உயர்த்தியதின் பலனைக் கார்ட்டு கவர்களின் விற்பனை மிகவும்குறைந்துவிட்டதென்றும், தபால் கார்ட் கவர் ஸ்டாம்பு அச்சிடும் நாஸிக் அரசாங்க அச்சுக்கூடத்திற்கு இதனால் இதுவரை ஒரு லட்சம் ரூபாய் நஷ்டமாமென்றும் தெரிகின்றது.

***

இரங்கோன் நகரத்துச் சிறந்த செல்வர்களிலொருவரான இராஜா டாக்டர் இராமநாத ரெட்டியார் சென்றவாரம் காலஞ்சென்றார் என்று அறிகின்றோம். இவர் பல தர்மங்களைச் செய்துள்ளார். திருச்சி திருவானைக் காவலில் 5 லட்ச ரூபாய் செலவில் க்ஷேத்திர யாத்திரை செய்பவர்களின் வசதிக்காக ஒரு சத்திரம் கட்டியுள்ளார். இரங்கோனில் ஒரு ஆண்பள்ளிக்கூடமும், பெண் பள்ளிக்கூடமும் நிறுவியுள்ளார். இரங்கூன் சர்வகலாசாலைக்குப் பொருளுதவி செய்துள்ளார். சென்னைமாகாண வாசிகளின் நலத்திற்கென்று கீழ்இரங்கோனில் கோயிலொன்று கட்டியுள்ளார்.

***

கண்டியில் அரசாண்ட அரச வம்சத்தினருக்கு அளிக்கப்படும் உதவிநிதி விஷயமாய் ஸிலோன் சட்டசபையில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு விடையாக அரசாங்கத்தார் கூறிய விவரம்:—

திரு. துரைசாமி ராஜா, ரூ 1,980. திரு. ராமகிருஷ்ண ராஜா, ரூ 1680. திரு. டி வரதராஜா, ரூ 1520. ஸ்ரீ வெங்கடாச்சியம்மாள், ரூ 1800. திருவேங்கட நரசிம்ம ராஜா 1,360. ஸ்ரீ முத்துகிருஷ்ணாஜியம்மாள் 1,200. திரு. கீர்த்தி சிம்மாலராஜா ரூ 1,061. திரு. வி. ராமகிருஷ்ணசாமி ராஜா 873-12-0. திரு. சுப்புசாமி ராஜா, ரூ 840. திரு. பங்காரு துரை, ரூ 480. திரு. கண்ணுசாமி ராஜா, ரூ 480. ஸ்ரீ லட்சுமிதேவி அம்மாள், ரூ 600, திரு. சி. கே. நரசிம்மால ராஜா 480. திரு. அரங்கசாமி நாயுடு, 480. திரு. சந்தான ராஜா, ரூ 480.

***

மதிப்புரை:—நாயக பற்பொடி, கெ. 1. நவதானியக்காரர் சந்து, ஆனைக்கல் வீதி, மதுரையில் இருக்கும் M. K. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களால் ஆயுர்வேத முறைப்படி செய்யப்பெற்ற நாயக பற்பொடி டப்பியொன்று வரப்பெற்றோம். இது பல்லுக்குஉறுதியையும் வெண்மையையும் தரவல்லது என்றும் தீராத பல்வலியை மூன்று தினங்களில் குணப்படுத்தும் என்றும் கூறப்பெற்றுளது மெய்யேயென அதனைஉபயோகப்படுத்தியவர்களால் அறிகின்றோம். எனவே இது பல்லிற்கு உறுதிகொடுத்து பல்நோய்வாராது காக்கும் தன்மையைக் கொண்டிருக்கக்கூடியதென்றே நம்புகின்றோம். வேண்டுவோர் ஒரு டப்பி வாங்கி உபயோகித்துப் பார்க்கலாம். டப்பி ஒன்றிற்கு விலை அணா 5. மாதிரிக்கென்று வாங்குபவர்களுக்காக 2½ அணா விலையிலும் பல்பொடி டப்பியிருக்கின்றது. வேண்டுவோர் மேற்படி கம்பனியாரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

***

பம்பாய் அரசாங்க விளம்பர இலாக்காவின் காரியதரிசி வெளியிட்டுள்ள அரசாங்க அறிக்கை வருமாறு.—

நாளுக்குநாள் பலாத்கார இயக்கம் வலுவடைந்து வருகின்றது. இதுவரையில்பம்பாய்ப்போலீசார்வரம்பு மீறாது நடந்துவந்தனர். சட்டவிரோதமான கூட்டங்களை இதுவரையில் சுடுவதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. போலீசாரும் கௌரவமாகவும் மரியாதையாயும் நடந்துகொண்டனர். எனினும் அராஜக இயக்கம் வலுவடைவதால் சட்ட சம்மதமுள்ள கடுமையான முறைகளை இனிக் கையாளவேண்டி வரும். இனிக் கூட்டங்களைக்கலைக்கப் போலீசார் சுடுவார்கள். ஆகையால் பொதுஜனங்கள் அமைதிக்கு வழிதேடவேண்டும். அராஜக இயக்கத்தில் சேர்ந்து அதனால் ஏற்படும் ஆபத்துக்குள்ளாவோர், யார்மீதும் குறைகூறுவதில் பயனில்லை. இதைப் பொதுஜனங்கள் அறிவார்களாக.

***

ஒரு சாதுவின் அரிய செயல்:— இங்கிலாந்தில் நடைபெறும் Every-body's weekly என்ற ஒரு பத்திரிகையில் எட்வர்ட் வாக்கர் என்பவர் எழுதிய கட்டுரையின் சுருக்கம் வருமாறு:—

1837-ம் ஆண்டு சாது ஹரிதாஸ் என்றவொருசாது இருந்தார். குழியொன்றில் தன்னைப் புதைக்கச்செய்து அதில் 48 நாள் அவர் இருந்தார். பிறகு 49 ஆம் நாள் அவர் உயிருடன் வெளிவந்தார். அவர் குழியில் புதைக்கப்படுகையில் இரணத்சிங் என்னும் அரசர் பஞ்சாபை ஆண்டுகொண்டிருந்தார். அவர் புதைக்கப்பட்ட விதமும் இவ்வாறு. மஹாராஜா முன்னிலையிலும், பிரஞ்சு இங்கிலீஷ் வைத்திய நிபுணர்கள் முன்னிலையிலும் இச்சாதுவின் மூக்கிலும் காதிலும் மெழுகும்பஞ்சும்வைத்து அடைத்து ஒரு பையில்போட்டுக் கட்டி மரப்பெட்டியில் வைத்து ஆணிவைத்துத் தைத்து, மாஹாராஜாவினது முத்திரையும் பெட்டிக்குப்போட்டு ஒரு குழியில் அப்பெட்டியையிட்டு மண்ணைப் போட்டு மூடினார்கள். அந்த இடத்தில் செங்கல்லினால் அறையொன்று கட்டப்பெற்று, அதுபூட்டுப்பட்டது. பிறகு எல்லார்முன்னிலையிலும் அப்பெட்டி திறக்கப்பட்டபோது சாது சாகாமல் இருந்தார். அவர் கைகால்கள் விறைத்திருந்தன. சிறிதுநேரம் வேது கொடுக்க அவர் கண்கள் திறந்து எழுந்தார். இந்த ... எல்லோருக்கும் வியப்பளித்தார்—(நவசக்தி

KALANILAYAM.
REG. NO. M, 2324.

—: வைத்திய ரத்ன :—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேக பலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதருஸ்.

கேடலாக் இலவசம்

அகராதிகள்:

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரபரேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடனும், விசேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

விலை உள்நாடு		விலை வெளிநாடு
,, 9-0-0	அரைலெதர் பயிண்டு	,, 10-8-0
,, 8-8-0	காலிகோ	,, 10-0-0
,, 7-8-0	(பயிண்டு செய்யாதது)	9-0-0

ரயிலில் அனுப்பப்புத்தகமொன்றிற்கு 6 அணா ஆகும் தபாலில் அனுப்பவேண்டுமானால் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

கலா நிலயம்,
புரசை, சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

எற்படுத்தியது] நாஷனல் [1906

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1906-ம் வருஷத்தில் எர்படுத்தப்பட்டது.

ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாது லைப் இன்ஷூரன்ஸ் நிரந்தர சேமிப்பாக விருக்கின்றது.

பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு
பெண்ணின் வரதக்ஷிணை குடும்பச் சேமிப்பு
இவற்றிற்கு இன்ஷியூர் செய்யுங்கள்.

குறைந்த விகிதப் பிரிமியங்கள்—தாராள நிபந்தனைகளை இந்தியரால் மட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி

மொத்த ஜீவேஜி ... ரூ. 1,72,00,060-க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் ,, 86,00,00

திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது.

ஏஜன்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.

T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்.
R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை
நாஷனல் நெருப்பு
& ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டார்
கவனித்து வருகின்றனர்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

டி. அனந்தாச்சாரி, பி. ஏ., பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கபபட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துள்ளது மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணா 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

அலங்காரம்—அழகு—ஸ்நானம்
இவைகளுக்கு எங்கள்

:: மணித் தைலம் ::

மிகச் சிறந்தது. ஆயுர்வேத முறைப்படி தயார்செய்யப்பட்டது. 50 வருஷங்களாகப் புகழுடன் உலாவிவருகிறது. தலைமயிரை உதிராமற் தடுத்து நீளமாக வளரச் செய்யும். முகத்திலுண்டாகும் வடுக்களையும் பருக்களையும் நீக்கும். உஷ்ணத்தைச் சமனஞ்செய்யும்.

5 துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1
5 புட்டிகள் விலை ரூ. 4

ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)